
நாட. 77.
4026

# வஸந்த ஸேனை

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம் சென்னை

மங்கள நூலக வெளியீடு 6

# வஸந்த சேனை

[வடமொழி நாடகத்தின் மொழி பெயர்ப்பு]

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

எழுதியது

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

V. PR. PL. M.
CHETTIAR
PAGANERI.

மங்கள நூலகம்

நுங்கம்பாக்கம் :: சென்னை

பதிவு செய்தது]

[விலை ரூ. 1-4-0

## வெளியீடுகளின் விவரம்:—

**1. சரித்திர தீபம் ரூ. 1 8 0**

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியது
வீரம் ஊட்டும் வியன் சரித நூல்

**2. சிதைந்த கூடு ரூ. 1 8 0**

வங்க கவியரசர் ரவீந்திரர் எழுத்து
த. ந. குமாரசாமியின் மொழிபெயர்ப்பு
மதனி, கொழுந்தன் வாழ்க்கைச் சித்திரம்.

**3. தமீனு ரூ. 1 0 0**

வீரப்புதல்வன், தீரத்தந்தை இவர்களின் போர்ச்சரிதம்
சுந்தர குமரன் எழுத்து, சகம் மெச்சிய புத்தகம்.

**4. பால பாரதம் ரூ. 1 0 0**

வேணு குப்புசாமி ஐயர் B. A. L. T. எழுதியது
பாலர் பாலிகைகள் பரிவுடன் படிக்க வேண்டியது.

**5. அமிர்தம் ரூ. 3 0 0**

நற்சுவை வாய்ந்த நவீனம்
முத்துசாமி ஐயர் B. A. L. T., எழுதியது
உபமானங்களின் பொக்கிஷம்

**6. வஸந்த சேனை ரூ. 1 4 0**

கருத்தையள்ளும் காவிய வசனம்
கற்றோர் போற்றும் கவின்பெறு கதை.
எம். எஸ். எஸ். எழுத்து

# முன்னுரை

4026,

உணவு ஒன்று! உருசியோ ஆறு! பாகம் செய்வோரின் திறனோ வேறு! எனவே அறு சுவை கொண்ட ஓர் உணவில் பல்வேறு வகை பார்க்கலாம், புசிக்கலாம், பூரிக்கலாம்.

அத்தகைய தமிழ் உணவு தருதலே நமது நோக்கம். அன்று சரித்திர தீபம் ஏற்றி வைத்தோம். அடுத்து, சிதைந்த கூடு கட்டினோம். அப்பால் அமிர்தம் வழங்கினோம்.

இப்போது வசந்தசேனை வருகிறாள் வரிசை பெற. இவள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த சூத்ரக மகாராஜனது சிருஷ்டி. அன்று வடமொழி ஆடையில் வெளிவந்தாள். இன்றோ தமிழ் உடையில் தோன்றுகிறாள்.

குணவான் கீர்த்தி குன்றின்மீ திட்ட விளக்கு. அவனிட்ட புசிப்பு பெருமையே தரும். வருவாய் வறண்டாலும் விழுப்பம் குன்றாது. இதற்கு கதா நாயகன் சாருதத்தன் சாட்சி. எக்குலத்து வந்தாலும் என்? குணக்குன்றே யனைய கணிகை வசந்தசேனை சான்று.

தமிழணங்கின் தாளிணைகளில் திவ்ய நூல் மலர்களை அர்ச்சிப்போம். தமிழன்பரின் கரதலங்களில் தனி நூல்களையும் சமர்ப்பிப்போம். அத் தாயின் அருள், அவளன்பரின் காதல் இரண்டும் நமக்கு ஊன்றுகோல். இருவரையும் வாழ்த்தி நிற்கும்.

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்,**

நிர்வாக ஆசிரியர், மங்கள நூலகம்.

# பொருளடக்கம்


| அத் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சாருதத்தன் | ... | 5 |
| 2. | வஸந்த சேனை | ... | 8 |
| 3. | வலிமான் | ... | 13 |
| 4. | சாருதத்த மந்திரம் | ... | 16 |
| 5. | களவு நூல் கவிஞன் | ... | 23 |
| 6. | மங்கல மனை மாட்சி | ... | 29 |
| 7. | கவிஞன் களிப்பு | ... | 32 |
| 8. | தாதியின் தகவு | ... | 36 |
| 9. | அன்னையும் குழந்தையும் | ... | 42 |
| 10. | புலிவாய்ப் புல்வாய் | ... | 49 |
| 11. | குற்றப் பத்திரிகை | ... | 55 |
| 12. | கழுமரம் குறுகல் | ... | 61 |
| 13. | சாக்கோல ஊர்வலம் | ... | 68 |
| 14. | தர்மம் தலை காக்கும் | ... | 73 |
| 15. | ராஜ ஊர்வலம் | ... | 75 |

# வஸந்தசேனை

## 1. சாருதத்தன்

பூமகளும் பொன் மகளும் பொருந்தி வாழும் பாரத பூமியில், மாளவம் எனும் மகிமைத் தலம் ஒன்றுண்டு. உச்சயினி எனும் நகரம் அந்நாட்டினுக்கு ராஜதானியாக விளங்கியது. அழியாப் புகழ்வாய்ந்த விக்கிரமார்க்கன், பாவலர் நேசனுன போஜராஜன் முதலிய பெருமன்னர் பலர், முன்னம் அந்நாட்டை ஆண்டு வந்தனர், பின்னர் அம்மாளவ நாட்டின் தீவினைப் பயன் திரண்டுவந்ததேபோல், **பாலகன்** என்பான் அதன் பார்த்திபனுக முளைத்தனன்.

'நாடென்ப நாடா வளத்தன' எனும் வள்ளுவர் வாக்கினுக்கு ஓர் இலக்காக முன்னம் விளங்கிய அம்மாளவ நாடு, பாலகனது பரிபாலனத்தில், வளம் மங்கி, வலி குன்றி, வனப் பிழந்து வீழ்ச்சியுறலாயிற்று. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் அவ்வேந்தனை அஞ்சி ஓடி ஒளிந்தன. காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் எனும் தீவினைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக அங்கே வந்து குடியேறித் தாண்டவமாடத் தலைப்பட்டன.

மானிட விலங்குகள் மழைக்கால் ஈசலேபோல் கிளம்பி, அந்நன்னகரை வெந்நரகாக்கினர். நல்லோரை

வஞ்சித்தும், தீயோரை இரட்சித்தும், அம்மதியிலாப் பாலகன் கொடுங்கோல் ஓச்சிவந்தான். ஆதலின், குடி மக்கள் அனைவரும் அச்சம் மிகுந்து, மன்னன்பால் மனம் கசந்து, வெறுப்புக்கொண்டு வாழ்ந்து வந்தனர்.

அவ் வணிநகரில் வேதிய **சாருதத்தன்** எனும் வர்த்தக வள்ளலொருவன் இருந்தனன். அவன் மூதாதையர், அலைவீசும் கருங்கடலை மரக்கலங்கொண்டு கடந்து, அவனியெங்குஞ் சென்று, இருநிதியைப் பெருமலையெனக் குவித்து வந்தனர். சாருதத்தனும் அவ்வாறே திரைகடலோடித் திரவியந்தேடிப் பொன்மகளின் நன்மகனாயினன். செல்வத்துப் பயன் ஈதலே எனக் கருதியும், அதனால் வரும் இன்பமே இன்பமெனக்கொண்டும், அற்றார் அழிபசி தீர்த்தும், அஃதே பொருள்வைக்கும் பொக்கிஷமெனப் போற்றியும் அக் கண்ணியவான் புண்ணியவானாக விளங்கினான். மேலும் அப்பெருமான் முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றும் விடாது இயற்றிவந்தான். பாலகனது பரிபாலனத்தால் பரிதவித்து நின்ற மாந்தர் பலரும் சாருதத்தனைச் சார்ந்து, பாலைவனத்தின் நடுவே பசும்புல் தரையும் தண்ணீரூற்றும் கண்டதேபோல், பேராறுதல் எய்தலாயினர்,

கர்ணனுக்குப் பின் கொடையுமில்லை, கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை என்பர் பெரியோர். அக்கன்ன மகாராஜனும் ஒரு சமயம் பொருளற்றுத் திகைத்து நிற்க நேர்ந்ததென மாபாரதம் கூறும். இறைக்குந்தோறும் ஊற்றெடுக்கும் மணற்கேணி என்றெண்ணி, ஈட்டிவந்த பொருளனைத்தையும் இரப்போர்க்கு ஈந்து வந்தமையால், சாருதத்தனும் இலையுதிர்ந்த ஈரமரமாயினன்,

இங்ஙனம் பொருள் வற்றிப்போன காலத்தும் அவனிடம் அருள் அற்றுப் போகவில்லை. வறுமையில் தோய்ந்து கிடந்தாலும், அவன் மனம் செம்மையுடன் துலங்கியது. முன்போல் அண்டினோரை ஆதரிக்கவும், வரையாது வறிஞர்க்கு வழங்கவும் வகையிலதே என்று உன்னியே, அவனது உள்ளம் கலங்கியது. தனது வறுமைக்காக அவன் சிறிதும் வருந்தினனில்லை.

நம்மைச் சோதிக்கவே ஆண்டவன் இவ் வறுமையை அனுப்பியுளன் என்று அவன் ஒரு சமயம் பகர்வான்; நமக்கு இது நன்று, இது தீது, என்பதை அவனே அறிந்து வழங்குவன் என்று ஒருவேளை உரைப்பான்; ஈசனார் திருவுளப்படி நடப்பதே நமது கடமையாமென நாளும் கூறுவான். வறுமையின் கொடுமையால் அவன் ஒருநாளும் நெறி பிறழ்ந்து நடந்ததில்லை. சுட்டாலும் செம்பொன் தன்னொளி கெடாதன்றோ! வறுமையும் அவனது பெருமையை விளக்கவந்த பூஷண மாகியது.

சாருதத்தன் மனைவியின் பெயர் **தூதிகை**. அவள் மகா உத்தமி; அடிசிற்கு இனியவள்; படிசொல் தவறாத பாவை; பர்த்தாவின் அடிவருடிப் பின்தூங்கி முன்னெழும் மாது; கையில் காசில்லாது கணவன் தவிக்குங் காலத்து, அவள் நயமொழியும் இளநகையும் காட்டி, அவனது கலக்கத்தை அகற்றுவாள்; ஆண்டவன் முற்றும் சோதியான் என்று ஆறுதல் கூறுவாள்; தனது நகை நட்டுக்களை நெருக்கடியான நேரங்களில் விலைக்குமாறி, வறுமையின் கடுமையைக் கணவன் கண்ணுக்குக் காட்டாது இல்லறம் நடத்துவாள். கற்பின் இலக்கணம் கற்க விரும்பும் காரிகையர் அந்நல்லாளின் பாதசேவை செய்தல் வேண்டும் என்ன

லாம். அவளது முகவிலாசத்தாலும் குணவிசேஷத்தாலும் அவன் அக முழுதும் தேசுற்றுத் துலங்கியது.

அவ்வூரில் **மைத்திரேயன்** என்பான் ஒருவன். அவன் வேடிக்கையாகவும் விநோதமாகவும் பேச வல்லவன்; சாருதத்தனுடன் நெருங்கி நெடுங்காலம் பழகியவன்; மதிநலம் மிகப் பெருவிடினும், குணநலம் மிகுந்தோன்; அவ்வுத்தமன் தனது நண்பன் வறிஞனாகிய காலத்தும், அவனைவிட்டுப் பிரியாது, உடனிருந்து உற்சாக மூட்டிவந்தான்; நேசனது சுக துக்கத்தைத் தனது சுகதுக்கமாகவே நினைத்து, நட்பின் உயர்வை விளக்குவா னுயினன்.

சாருதத்தனுக்கு **ரோகசேனன்** எனும் மைந்தன் ஒருவன் பிறந்தான். அப்பாலன் குதலைமொழி பேசித் தாய் தந்தையரைக் களிப்பித்து வந்தான். மதலையின் மழலைச் சொல்லால் ஆறுத மனப்புண்ணும் உண்டோ? அக்குமரன் தன் கலிதீர்க்க வந்தவன் என நினைந்து, அவனைச் சீராட்டிப் பாராட்டி, அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தான் சாருதத்தன்.

## 2. வஸந்த சேனை

**உச்சயினி நகரில் வஸந்த சேனை என்னும் பெண்மணி** ஒருத்தி இருந்தனள். அவள் உருத்திர கணிகையரின் குல திலகம். விவேகம், வண்மை, வித்தை, வனப்பு முதலியவற்றில் அவளுக்கு இணையாவார் அங்கு ஒருவரும் இலர் என்றே இயம்பவேண்டும். குலமகளுக்குரிய நல்லொழுக்கமும் நற் குணமும் அவளிடம் குடிகொண்டிருந்தன. சாருதத்தனும் வசந்தசேனையும் முன்னம் ஒரு சமயம் நந்தவனத்தில்

சந்திக்க நேரிட்டது. அந்நாள் தொடங்கி இருவரும் நேசமும் பாசமும் முதிர்ந்து, உடல் இரண்டு, ஆனல் உயிர் ஒன்று, எனக் கண்டோர் அனைவரும் களித்துக் கூற, வாழ்ந்து வந்தனர்.

தாமரைத் தடாகத்தில் தண்ணீர் நிரம்பியிருப்பின், பலவகைப் பறவைகளும் பறந்துவந்து, பாங்காக நீராடிப் பரவசங் கொள்ளும்; அக் குளத்துநீர் வற்றி விட்டாலோ, புன் பறவைகள் ஒன்றும் அங்கு எட்டிப் பாரா. அங்ஙனமே சாருதத்தன் கைசளைத்த நாள் முதல், பழைய நண்பர்களில் பலரும் அவனை அணுகுவதில்லை; ஒருவேளை அணுக நேரிடினும், அவனுடன் சம்பாஷிப்பது அருமையாம். வசந்த சேனையோ வற்றிய குளத்தில் ஒட்டி உலரும் ஆம்பலேபோல, தன் தலைவனைக் கைவிடாது, அவனிடம் முன்னையினும் பன்மடங்கு பாசமும் பரிவும் காட்டிப் பழகி ஒழுகி வந்தனள்.

யாருமறியா வண்ணம் தனது உடைமைகளை உள்ளன்புடன் வழங்கி, நாயகனது வறுமை நோயை விரட்டி ஓட்ட, அவ்வனிதை பன்முறை முயன்றதுண்டு. 'மாதரார் அளிக்கும் மாநிதிபெற்று, மானமழிந்து வாழ யான் உடன்படேன்' என அவன் மறுத்து விடுவான். பின்னரும் அவ்வனிதா ரத்தினம் தனது பேரணிகளைக் கழற்றி, ஏதேனும் காரணங் காட்டி, அப்பெருமான் வீட்டில் வைத்துவிட்டு வருவாள். சாருதத்தன் வேண்டும்போது அவற்றை விற்று, வரும் பணத்தை எடுத்துக்கொள்ளட்டும் என்பதே அவளது கருத்து. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ? அஃதேபோல் சாருதத்தன் தனது தரித்திரம் தாங்க முடியாதிருப்பினும் அவ்வணிகளை அவ

ளிடம் அடுத்த நாளே தகுதியான ஆள்வசம் அனுப்பி விடுவான்.

வறுமையிலும் செம்மையே பூண்டொழுகும் அவ்வள்ளலின் விழுமிய குணத்தைக் காணக் காண "அந்தோ! இத்தகைய சீராளனும் செல்வமின்றி வாட நேரிட்டுளதே! இதுவும் சிவனார்தஞ் செயலோ! இன்றேல், முன்னை வினையின் மொய் பயனோ!" என்று அக்கணிகை கண்ணீர் உகுத்துக் கலங்குவாள்.

ஒரு தினம் வசந்தசேனை சாருதத்தனது மாளிகை நாடி, இராஜவீதி வழியே செல்லலானாள். அவ்வேளை அவளைக் கண்டுவிட்டான் **சகாரன்** எனும் கொடியன்.

அச்சகாரன் பாலகனுக்கு மைத்துனன்; மேலும் அவனுக்கு ஆப்த மித்திரன்; மாபாதகம் புரிவதில் உற்ற துணைவன்; ஈவு இரக்கம் சிறிதும் இல்லாதவன். உண்மைக்கும் சகாரனுக்கும் வெகு தூரம். பொய் யாணையிடல் அவனுக்குத் தயிர்ச்சாதம். சூதாட்டத் தில் அவன் கொண்ட மோகத்துக்கு அளவு இல்லை. யாரேனும் அநாதைகளாக அகப்பட்டால், சித்திர வதை செய்து, அவன் சித்தம் மகிழ்வான்; தட்டிப் பேசுவார் இல்லாவிட்டால், சண்டப் பிரசண்டனாக விளங்குவான்; தடுத்து நின்றால் எடுப்பான் ஓட்டம். அவனது உருவம், கண்டோர் அனைவரும் அருவருக் கத்தக்க விகாரசொரூபம்; ஆயினும் அவன் தனக்கு அநங்கனும் இணையாகான் என்றெண்ணித் தருக்கி நடப்பான். காவியம் எனும் சொல்லை அவன் காதி னாலும் கேட்டறியான்; ஆயினும் பலகலைகளிலும் வல்லவன்என அவன் வீறுபேசுவான். அவன் ஊனத்தை வாய் அங்காத்து உரையாடப் புகுந்து, இங்ஙனம் சரமாரியாகப் பொழிவான்:—

"குந்திதேவிக்கும் காகுத்தனுக்கும் பிறந்த மேகநாதனும் ஆண்மையில் எனக்கு ஈடாகான்" எனப் பிதற்றுவான்; 'இராதையின் புதல்வன் இராவணனைப்போல், யான் நிர்மூடன் அல்லன்' என்று சாற்றுவான்; தருமபுத்திரன் தம்பியாம் ஜடாயுவும் என்முன் வரக் கூசுவான் என்று விளம்புவான்.

தேளுக்கு மணியம் கிடைத்ததுபோல், இவ்வற்பனுக்குச் சமஸ்தானிகன் என்னும் உத்தியோகம் கிடைக்கலாயிற்று. மதுபானத்திலும் அதிகார மமதையிலும் மூழ்கி, அவன் புரிந்த அநியாயங்கள் ஏட்டில் அடங்கா, இச்சகம் பேசித் திரியும் கொச்சை மாக்கள் பலர் சதா அவனைச் சூழ்ந்து நின்றனர்.

தெருவில் வசந்தசேனையைக் கண்டதும், அவளைத் தொடர்ந்துசென்று, வழி மறிக்கத் தலைப்பட்டான் அத்துன்மார்க்க சிகாமணி. அவனுடன் அவ்வேளை பணியாளர் இருவர் இருந்தனர். அவளை விடாது பிடிக்குமாறு அவர்களையும் அத்தீயோன் ஏவினன். அக் கிங்கரரின் கையில் சிக்காது, தப்பியோடக் கருதி, அம் மங்கைநல்லாள் விரைந்து நடந்தாள். அதற்குள் அந்தி மாலையும் வந்தணுகியது. பணியாளர் இருவரும் முன்னே தொடர்ந்து நெருங்க, சகாரன் சற்றுப் பின்னே தங்கிவிட்டான்.

ஆயினும் அவன், "அடே! ஏமாந்து விட்டுவிடாதீர்கள். அவளை மறித்துப் பிடியுங்கள்! அதோ உள்ள சாருதத்தன் வீட்டில் நுழைந்துவிடப் போகிறாள்! இன்று அவளைப் பிடிக்காவிடின், உங்களைச் சும்மா விடேன். மலர்மாலையின் வாசம் இதோ தெரிகின்றது. தொடர்ந்து செல்லுங்கள். தொடர்ந்து செல்லுங்கள்" என்று கூவித் தொடரலாயினன். பணியாளர் இரு

வரும், "சாருதத்தனது இல்லம் இங்குளது என்று சொல்லிக்கொடுக்கின்ற இவன் மதியீனத்தை என்னென்று சொல்வது? ஐயோ! பாவம்!! வழியே செல்லும் ஒரு மாதினை ஆடவர் மூவர் சேர்ந்து மடக்குதல் வெகு நன்று. தப்பியோடிப் பிழைத்துப்போகட்டும்" எனச் சற்று நிதானித்து விட்டனர்.

வசந்தசேனையும் அக்கணமே பூங்கோதையைக் கழற்றிக் கீழே வீசியெறிந்து விட்டு, சாருதத்தன் இல்லம் நோக்கிப் பஞ்சடிநோகப் பறந்து நடக்கலுற்றாள். இதற்குள் இருளும் சற்றே பரவியது. வலையினின்று விடுபட்ட மானேபோல், சந்து ஒன்றில் வசந்தசேனை சடக்கென நுழைந்து, வாயு வேகமாக ஓடி, வேதிய சாருதத்தன் வீட்டினுள் சந்தடியின்றி நழுவினள்.

சகாரனோ கைக்கு எட்டியது வாய்க்கெட்டாமல் போனதை யறிந்து, வாய்க்கு வந்தவாறு பிதற்றுவானானான். "வசந்தசேனா! இன்று என்னை ஏமாற்றிவிட்டனை. ஆயினும் என்ன! உன்னை விட்டுவிட்டேன் என்று எண்ணாதே. பார்த்தனைப்போல் யான் பெருங் கோழையல்லன். யானோ பாலகன் நண்பன் சகாரன் என்பதை நீ ஒருநாளும் மறவாதே," என்று வாய்மதம் பேசிவந்தான். உடன்வந்த பணியாளர் இருவரும் தலைவனது ஈன நிலைகண்டு, தம்முள் மகிழ்ந்தனரேனும், வெளிக்குத் துடித்துத் தடுமாறுபவரேபோல் நடித்து வந்தனர். வசந்தசேனையோ 'இன்று ஈசன் அருளால் உயிர் தப்பினேம்' என்று எண்ணியபடியே, சாருதத்தன் வீட்டுக் கதவருகில் வந்து வாடிநின்றனள்.

# 3. வஸந்தசேனை

மூப்பொழுதும் பூசை புரியும் பூசுர திலகம் நம் சாருதத்தன். அந்திப் பொழுதுவந்து புகுந்ததும், வழக்கம் போல் விமலனை ஆராதித்தான். பின்னர் இராதை எனும் தாதியை அழைத்து, நிர்மாலியத்தை வாசலில் போட்டுவா என்றேவினான். தாதியும் தீப மொன்றைக் கைதனில் ஏந்திவந்து, வாயில் கதவைத் திறந்து, தொட்டியொன்றில் கொட்டச் சென்றனள். வாயுவின் வேகத்தினால் விளக்கொளி அவிய, அதே சமயம் வசந்தசேனை அம் மாளிகையினுள் நுழைந்தனள். நுழைந்தவள் தனது அவலநிலையை எவரும் அறியாதவாறு ஒரு முடுக்கில் நிற்கலானாள்.

வசந்த சேனையைத் தொடர்ந்து வந்த சகாரன், அச்சாருதத்தனது மாளிகை நண்ணினான். நண்ணியதும், நிர்மாலியத்தை எறியவந்த இராதையை வசந்த சேனையெனக் கொண்டு, "சிக்கிக் கொண்டாயா வசந்தா? இனி நீ தப்புவது எப்படி? உன்னை என்ன ஆட்டம் ஆட்டுவிக்கிறேன் பார். என்னைத் தடுப்பார் யாவர்? சம்புவே வரட்டும்; அல்லது சங்கரனே வரட்டும். இல்லாவிடின் சிவனே வரட்டும். அவர்கள் ஜபம் என்னிடம் சாயாது" என்று கூறி, ஒரேபிடியாய்ப் பிடித்தனன்.

உடனே இராதை கோவென்றலறி ஓலமிட்டனள். அவிழ்ந்த உடைக்கு வந்துதவும் கையேபோல் மைத்திரேயன் அம் மாளிகையி னுள்ளிருந்து, தடி யொன்றுகொண்டு வீதியில் ஓடிவந்து, "பெண்ணின் மானம் குலைக்கும் புல்லன் யாவன்? யாவனாயினும் என் குறுந்தடிகொண்டு அவன் சிரத்தை நூறுசுக்கல்

ஆக்குவேன், காண்" என்றனன். தடியும் கையுமாய் வந்த மைத்திரேயனைக் கண்டதும், கோழை சகாரன் அஞ்சி அயர்ந்து, ஆடு கவர்ந்த கள்வனைபோல் விழித்துப் பதுங்கிப் பதுங்கி பின்னே நகர்ந் தான் மெதுவாக.

அதுகண்டு, மைத்திரேயன், "அடாத செயல் புரிந்த அற்ப! உன்னை என்னபாடு படுத்திவைக்கிறேன் பார். காவலனுக்கு நீ இனியவனாயினும் உன்னைக் காலனுலகம் அனுப்புகின்றேன்! இவ்வித அநீதங்கள் இப்பாலகனது நகரில்தான் காணத்தகும். இக்கொடுங் கோலன் ஆளுநாட்டிற் கடும்புலிவாழுங் காடே மேல். பெண்டிர்பின் திரியும் பேயே! வைகலும் நீருட் கிடப்பினும், கல்லிற்கு மெல்லென்றல் சால அரிதா கும். அதுவேபோல், உன்போன்ற வஞ்ச நெஞ்சத் தார்க்கு என்ன சொல்லியும் யாது பயன்? உனக்குக் காலம் குறுகிவிட்டது!" என்று கூறிக் கையிலிருந்த கதையை ஓங்கினன்.

சகாரன், "என் சொல்லுக்கு எதிருரைப்பார் யாவரே யாயினும், அவரை யாம் சும்மா விடப் போவ தில்லை. அவர் படும்பாடு பஞ்சும் படாது. வசந்த சேனையை இக்கணமே எம்மிடம் ஒப்படைக்கா விடின், உன்னையும் உன் எஜமானன் சாருதத்தனையும் சும்மா விடுவதில்லை," எனக் குரைத்துக்கொண்டே பின்னிட்டான். பணியாளர் இருவரும் தமது ஈன நிலையை நினைந்து நாணி, மைத்திரேயனை அணுகி வணங்கி, "எம் பிழை பொறுத்தருள்க. சாருதத் தரைப் பார்க்கவும் எமது மனம் கூசுகின்றது. இதனை அவர் காதில் போடாது மன்னித்தருள்க," என வேண் டினர். மைத்திரேயனும் நண்பனுக்கு வீண் கவலையுண்

டாக்க விரும்பவில்லை. ஆதலின் அவர்கட்கு நன்மொழிகூறி விடைதந்தனுப்பி விட்டான்.

நாதனே யாயினும் வேதியனது வீடானதால், வசந்தசேனை தான் ஒளித்திருந்த இடத்தைக் கடந்து அப்பால் செல்ல ஒருப்படவில்லை. பூசனையில் ஆழ்ந்திருந்த சாருதத்தனோ அவ்விருட்டிலே ஒரு மூலையில் நின்றவள் இராதையே என்றெண்ணி, "குழந்தை உரோகசேனனை உள்ளே அழைத்துச் செல். வெளியே குளிர்காற்று ஜில்லென்று வீசுகின்றது," என்று தலை நிமிராது கூறினான். அப் பெண்பாவையோ அது கேட்டும் இருந்த இடம்விட்டுப் பெயராது நின்றனள்.

அப்போது சாருதத்தன் "பணிப் பெண்ணும் நாம் இட்ட வேலையைச் செய்யத் தயங்குகின்றாள். இதற்குக் காரணம் நமது ஏழ்மைத் தனமே," என்று தன்னையும் தனது ஏழ்மையையும் நொந்துகொண்டு, நிமிர்ந்து நோக்காது, எழுந்து, வாசல்நோக்கி நடந்தான். வசந்த சேனையும் அது சமயம் வாளா இருந்து விட்டாள். சாருதத்தன் அவளைக் கடந்து, தெருவ்ாயில் கிட்டியதும், மைத்திரேயனும் இராதையும் உள்ளே நுழைந்தனர். சாருதத்தன் அதுகண்டு ஆச்சரியங் கொண்டு, இல்லத்தினுள்ளே இருளில் நின்ற மாது யாராயிருக்கக்கூடுமென்றறிய உட்சென்றான்.

தலைகுனிந்திருந்த வசந்தசேனை தன் நிலையினின்றும் பெயரவில்லை; ஆனால் மறைவலாளன் வந்து வினவவே, அவ்விடம் தான் வந்து புகுந்த வரலாற்றை அம்மாது தெரிவித்தனள். அந்தணன் அதுகேட்டு அதிசயித்து, "நல்லாய்! பாலகனது ஆட்சிக்காலத்திலே புருஷத்துணையின்றி வீதியில் வருதல் ஆபத்துக்கு இடமாம்" என்று கூறினன். பின்பு வசந்தசேனை தான்

அணிந்திருந்த பைம்பூண் அனைத்தையும் கழற்றிக் கொடுத்து, "அந்தணர் பெரும! தங்களைத் தரிசிக்க வந்தேன். சமுகத்தின் ஆசிபெற்று, எனது இல்லம் செல்கின்றேன். வழியிலே பயமதிகம். ஆதலின் இந் நகைகள் தங்களிடம் இருக்கட்டும்" என்று கூறித் தனது வீடு திரும்ப யத்தனித்தனள்.

சாருதத்தன் அந் நகைகளை ஏற்று, அவற்றை மைத்திரேயனிடம் கொடுத்தான். நகைமுடி கண்டு மைத்திரேயன் இள நகை பூத்து, 'நங்காய்! உந்தன் அணியொளிக்குமுன் பகல் ஒளியும் மழுங்கும்' என்ருன். சாருதத்தன் சிரித்து 'நண்ப! அணிகாவல் நீயே ஆவாய். உள்ளே சென்று வைத்து வா. இருட்டில் வசந்தசேனை தனித்துச் செல்லல் கூடாது. உடன் அழைத்துப்போய் இல்லத்தில் விட்டு வருவோம் வா" என்ருன்.

வசந்தசேனை தன் வீடு சென்று, ஒருவாறு ஆறுத லடைந்தனள். உடைந்தார்க்கு உற்றுழி உதவும் அவ் வேந்தலுக்கு இது சமயம் ஓரளவே தான் சகாயம் செய்ய நேர்ந்ததைக் குறித்து, அவள் சித்தம் குளிர லாயிற்று. இச் சிந்தனையில் அப்பாலே தன் மாலே அலு வல்களை மறந்தாள்; நாத் தழும்புறும் வண்ணம், சாரு தத்தனது நாமத்தையே பயின்று, அவன் நிலையை நினைந்து மனம் நைந்துருகினுள்.

## 4. சாருதத்த மந்திரம்

**பால**கனது பரிபாலன காலத்தில், சூது, குடி, கொலே முத லிய பஞ்சமா பாதகங்களுக்கு உச்சயினி நகரம் ஓர் உறைவிடமா யிருந்தது. அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்பர் ஆன்ருேர். அம் மாநகரின்

காவலனே அத் தீவினைகளுக்கு ஆதரவளித்தனன். எனவே, அந் நகரமாக்களில் மாதுரகன், சபிகன் போன்றோர் சூதாடுவதும், மதுபானம் பண்ணுவதுமே நித்திய கருமமாகக் கொண்டு, கால முழுவதையும் கழித்து வந்தனர் என்பதில் வியப்பு ஏது? சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற, அந்த வனந்தானுமச் சந்தனமும் தன்னினமும் மாள்வதுடன், தானுங் கெடச் சுடுவதேபோல், அன்னவர் தாமுங் கெட்டுத் தமரையும் நாள் தவருமல் கெடுத்து வந்தனர்.

சாருதத்தனிடம் முன்னம் சேவகம் செய்துவந்த **சம்வாகன்** என்பான் ஒருவன் உண்டு. வறுமையுற்ற வேதியனிடமிருந்து விலகிய பின்னர், வேறு பிழைப்பும் உழைப்புமின்றி, அவன் ஒரு பெருஞ் சோம்பியானன். நிலத்தியல்பால் நீர் திரியும்; அஃதேபோல் இனத்தியல்பால மாந்தர் குணமும் மாறுபடும். சேராதவருடன் சேர்ந்தால் சீரும் சிறப்பும் சிதறுண்டு போதல் எளிதாம். சகவாசதோஷம் சிறைவாச தோஷமாக முடிதல் திண்ணமன்றோ? சம்வாகன் சூதாட்டம் ஆடும் சிலருடன் நட்புக்கொள்ள நேரிட்டது. ஆதலின் பன்றிக் கூட்டத்தில் தப்பிச் சேர்ந்த பசுங்கன்றே போலானன் சம்வாகன்.

ஒரு நாள் சம்வாகன் தனது துணைவருடன் சூதாடித் தான் வைத்திருந்த சிறிது பொருளையும் தோற்று விட்டனன். அதன்றியும் பத்துப்பொன் அதிகக் கடனும்பட்டு, அதனைத் திருப்பித்தர வகையில்லாது திகைத்து நிற்கவும் நேரிட்டது. அவ்வேளை சபிகன் எனும் தீயோன் அவனைப் பெரிதும் கடனுக்காகத் துன்புறுத்தவே, சம்வாகன் தன்னை மீட்கத் திறனில்

லாது விழித்து நின்றனன். இவை யாவும் தியவழியே திரிந்த பயனுகுமென்று அவன் நினைந்து வருந்தியது உரைக்குந் தரமன்று.

விரைந்தோடி மறைந்துவிடத் துணிந்த சம்வாகன் ஆங்கே அருகில் இருந்த பாழ்ங் கோவிலில் புகுந்து, இருட்டிலே கர்ப்பக் கிருகத்தில் நுழைந்து, சிலைபோல் நின்றுவிட்டான். அவனைத் தொடர்ந்து பிடிக்கவந்த இருவர் எங்கும் தேடியலைந்தனர்; முடிவில் சம்வாகச் சிலையருகில் வந்தனர். நெருங்கிநின்று இருவரும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கண்ணைச் சிமிட்டி நகைத்துக்கொண்டே தரையில் கோடுகிழித்து ஓராட்டம் ஆட அமர்ந்தனர்.

நான்தான் முதலில் ஆட ஆரம்பிப்பேன் என்முன் ஒருவன், 'இது என்முறை' என்முன் மற்ெருருவன். "ஒரு நாளும் இல்லை. என் முறைதான் இது" என்முன் முதல்வன். இவையனைத்தும் கேட்டுநின்ற சம்வாகன் சும்மா பார்த்திருக்க முடியாமல் விரைந்துவந்து, "உங்கள் முறையில்லை. நியாயமாக இது என்முறை தான்" என்முன். இருவரும் உடனே கிளம்பி, "சாமி வந்ததடா! பிடித்தாட்டுதடா! இனி உன்னை விட மாட்டோம். கடன்பாக்கியைக் கக்கிவிடு. இல்லாவிட்டால் கன்னம் உடைந்துபோம்" என்று கூறிச் சம்வாகனை நையப் புடைக்கலாயினர்.

**சம்வாகன்:** ஐயோ! என்னை அடிக்காதீர்! கடன் கொடுத்து விடுகின்றேன். பாதியை மன்னித்து விடுங்கள், பாதியை அளித்து விடுகின்றேன்.

**முதல்வன்:** முன்னம் பாதியைக் கொடு.

**சம்வாசகன்:** ஐய! நீரும் உமது பாதியை மன்னித்துவிடும்.

**இரண்டாவன்:** அப்படியே! என் பாதியை மன்னித்தேன்.

உடனே அவ்விடம் விட்டு ஓடப் பார்த்தான். ஆனால் அவர்களோ அவனைப் பிடித்து நன்கு புடைத்தனர். முடிவில் சம்வாகன் திமிறிக்கொண்டு, தப்பியோட முயன்றான். சபிகனே அவனைத் துரத்திச் சென்றனன். அவ்வேளை தற்செயலாக வந்த தர்த்துரகன் எனும் மற்றொரு சூதாடியோ பழம்பகை கருதி அச்சபிகனை மறித்து, அவனது கண்ணில் மண்ணைத் தூவினன். சபிகன் தன் கண்மண்ணைத் துடைத்துத்தள்ளி விழித்து நோக்குமுன், சம்வாகன் நழுவினான். தர்த்துரகனும் ஓட்டம் எடுத்தான். அதன்மேல் சபிகனே கோப மிக்குண்டு மறியுண்ட வெள்ளமே போல் இரைக்க இரைக்க வீதிவழியே தொடர்ந்து ஓடலானான். சபிகன், சகாரனது அந்தரங்கனானதால் ஒருகால் அவன் மூலம் தனக்குக் கெடுதல் விளையக் கூடுமெனக் கருதிய தர்த்துரகன், மீண்டும் தன் வழியே நோக்கி விரைந்து நடந்தான்.

சம்வாகன்: "அப்பா! நல்லவேளை யான் மீந்தேன். கடன் முழுதும் தொலைந்தது. தலைதப்பிப் பிழைக்க அதுவே தருண"மென அடுத்திருந்த வசந்தசேனையின் வீட்டில் ஓடி ஒளிய விரைந்துநடந்தான். அதுவரையில் தனது மூக்கிலிருந்து உதிரம் பெருகுவதை அவன் கவனிக்கவில்லை. அவ் வேளை உப்பரிகையின் மீதிருந்த உத்தமி வசந்தசேனை வாயிலைநோக்கி ஓடிவந்து நோக்கினள். சம்வாகன் உடனே அவள் பாதத்தில் விழுந்து அபய மிட்டான். கருணைமிக்க அக் கன்னிகை அவன்விருத்தாந்தத்தை வினவினள். அச்சம்வாகனும்,

"தாயே! தமியேன் ஒரு துர்ப்பாக்கியசாலி. சாருதத்த வேதியரிடம் நெடுநாள் வேலை பார்த்துவந்தேன். அவ்வள்ளலார் வறுமையெய்த, யான் வேலையின்றித் திண்டாடிநிற்க நேரிட்டது. அது சமயம் மதிமோசத்தால் கயவர் சிலருடன் சகவாசம் செய்யலானேன். அவர்களுடன் கூடிச் சூதாட்டத்தில் மூழ்கினேன். இன்றுகாலை ஆட்டத்தில் தோற்றதால், பந்தயம் கொடுக்க வழியில்லாதுபோயிற்று. பந்தயப் பணம் பிடுங்க எண்ணி அத் தீயோர் என்னைச் சித்திரவதை செய்தனர். யாரோ ஒருவன் வந்து வழியில் அவர்களை வழிமறிக்க, யான் இங்கு ஓடிவந்து உயிர் பிழைத்தேன். அவர்கள் என்னை விடார். இங்கும் இரண்டொரு கணத்தில் வராதிரார். அடியேனைக் காட்டிக்கொடாது காத்தல் உங்கள் பாரம்" என்று கூறினன்.

இதற்குள் சபிகனும் பின்னும் இருவருமாக இரத்தம் சிந்திய அடையாளங்கண்டு தேடிவந்து வாசலில் நின்று, "அடே! அயோக்கியா! எங்கடா மறைந்து விட்டாய்? வெளியில் வாடா; கடனைக் கொடடா. இல்லாவிட்டால் உன் உயிர் உனதில்லை" என்று கூவிக்கொண்டு சம்வாகனிடம் ஓடிவந்து மடியைப் பிடித்திழுத்தனர். வசந்தசேனை அவர்கள் இடையில் நின்று விலக்கித் தடுத்தனள்.

தடைக்கஞ்சிய பாம்பேபோல் அவர்கள் சற்று நிதானித்து, சம்வாகன் தம்மை மோசம்செய்து ஓடிவந்ததை உள்ளபடி நவின்றனர். வசந்தசேனை அதுகேட்டு, 'அந்தோ! பாவம்! காலவித்தியாசத்தினால் சம்வாகன் இக்கதிக்கு ஆளாயினன். இயற்கையில் அவன் துர்க்குணி அல்லன். மேலும் சாருதத்தனது வறுமையன்றோ இவன் துன்பத்துக்குக்

காரணமாகியுளது, சாருதத்தனது பணியாளனுக்கு இக் கதி நேரலாகுமோ?" எனக் கருதி, தானணிந் திருந்த கடகங்களில் ஒன்றைக் கழற்றி, "இதனை சம் வாகனது கடனுக்கு ஈடாக வைத்துக்கொள்க," என்று சபிகனிடம் கொடுத்தனள்.

அக் காரிகையின் பரிவும் உரையும், உயர்வும் உதவியுங் கண்ட சபிகன் முதலானோர், "இது கனவோ? அல்லது நனவோ?" என மயங்கினர். கடன்தொகையினும் பன்மடங்கு மதிப்புள்ள கடகத் தைப் பெற்று அன்னவர் மறைந்து போயினர். கால வசத்தால் இக் கோலத்திற்கு ஆளான சம்வாகனும் கருணை நிரம்பிய அக் கணிகையின் உதார குணங் கண்டு, உள்ளம் விண்டு, ஆசனம் விட்டெழுந்து அவளைப் பணிந்து நின்றான்.

நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும் எனும் விதிக்கு இலக்காகி, நல்லாரின் தரிசனத்தால் நன் மதி பெற்ற சம்வாகன் உடனே "அம்ம! கேள்! முன்பின் அறியாத இவ்வேழையின்மீது நுந்தமக்கு இத்தகைய கருணை பிறந்ததன் காரணம் யாதோ அறி யேன். இதற்கு யான் என்ன கைம்மாறு இயற்ற வல்லேன்? நான் முன் செய்த தவப் பயனோ? அல்லது சாருதத்தனது நாம மந்திரத்தின் நற்பயனோ? ஏதோ அறிகிலேன். சாருதத்தனது சேர்க்கை சின்னாளேனும் எனக்கு இராதிருப்பின், இந் நன்றி யறிவு எனக்குப் பிறந்திராது. நல்லோரிணக்கத்தால் நேரும் நற்பலனை இன்றே கை நெல்லிக் கனிபோல் கண்டேன். ஆத லின், அன்னாய்! அந் நல்லான் நீடூழி வாழ்ந்து, என் போன்ற ஈனரை என்றும் கரையேற்றுமாறு, எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு அருள் புரிவாராக! இனி

யான் தங்கள் தயாள குணத்தை எக்காலும் மறவேன். இது உறுதி. இன்னல்தரும் பொருளையும் சின்னத் தனமான சூதையும் இனி அடியேன் கனவிலும் கருதேன். பேராசை கொண்ட சபிகனோ பன்னூறு மடங்கு விலையுள்ள பொன்வளையலைத் தனது பத்துப் பொன்னுக்கு ஈடாகப் பெற்றுச் சென்றான்: ஆசைக்கும் ஓர் அளவுளதோ? அது அடங்குமோ?

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன் சொற்களை கட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்."

எனும் வாக்கைக் கடைப் பிடித்து ஒழுகும் அச்சாருதத்தனது திருநாமத்தைச் செப்பின வளவிலேயே எனக்கு இந்நன்மை வாய்த்ததெனின், இனி அன்னாளைக் கண்கண்ட தெய்வமெனவும் உம்மை எனது அன்னையாகவும் மதித்துய்ய வேண்டும்," எனப் புகன்று விடைபெற்றுச் சென்றான். அக்கணமே அவன் இப்புன்புலால் யாக்கையை வெறுத்துப் புகழுடம்பைப் பெற விரும்பி அருந்துறவு பூண்டு பெரும் பௌத்த மதப்பள்ளி சேர்ந்தனன்.

சம்வாகன் விடைபெற்றுச் சென்றதும், வசந்தசேனை தனது மாளிகையினுள்ளே நுழைந்தனன். உடனே கர்ணபூரகன் என்னும் அவளது யானைப் பாகன் ஓடிவந்து, "தாயே! நமது குஞ்சரம் கட்டுத் தறியையும் சங்கிலியையும் முறித்துக்கொண்டு இராஜ வீதியில் புகுந்து, ஓர் உயிரை வதைக்கத் தொடங்கியது. அம் மதகரியை மடக்கியடக்கிக் கொணர ஆடவர் பலர் முயன்றும் பயன்படவில்லை. அக் கரிமாவினுக்கு அஞ்சின மக்களனைவரும் நாலா பக்கங்களி

லும் வெருண்டோடினர். அதுகண்ட யான் அக்களி யானையைக் கூவியழைப்ப, அவ்வேழம் பசுங்குழவியே போல் என் பின்னரே பணிந்து வந்தது. அவ்வேளை நகரப் பெருமக்களில், இதனைக் கண்டு வியப்புற்ற ஒருவர் என்மீது களிகூர்ந்து, விலை மதிக்க ஒண்ணாத இப்பட்டாடையை எனக்குப் பரிசளித்தார்" என்றுரைத்து ஒரு கோடியைக் காட்டினன்.

அதில் சாருதத்த வேதியனது பெயர் பொறித்திருப்பக் கண்டு பெருமூச்செறிந்தனள் வசந்தசேனை. நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராயினும் நற்கருமங் கண்டு, இன்முகங்கொண்டு, நன்கொடைதரப் பின் வாங்காரென அவள் பெரிதும் களித்தனள். பரிசளித்த பெரும் புருஷன் இன்னாரென உணர்ந்த மாவுத்தனும் மனம் பூரித்தான்.

## 5. களவுநூல் கவிஞன்

**பா**கனுக்குப் பரிசளித்த சாருதத்தன் தன் நண்பனை பாடகன் இரேபிலகனது இல்லம் சென்றான் கானரசம் பருக. அக்காலை நிழல்போல் பிரியாதொழுகும் அன்பன் மைத்திரேயனும் அவனுடன் போயினன். அங்கு நடந்த இன்னிசைத் திருவிழாவில் இருவரும் கலந்து களித்து, இரவில் நெடுநேரங் கழித்து, வீடு திரும்பினர். வெகுநேரம் வரையில் கண்விழித்த அலுப்பினால் மாளிகை சேர்ந்தவுடனே, இருவரும் அயர்ந்து நித்திரையி லாழ்ந்தனர். மைத்திரேயனோ வசந்த சேனையின் நகைமுடிப்பைத் தன் கையிலேயே வைத்துக்கொண்டு படுத்திருந்தான்.

ஓங்கு புகழ்வாய்ந்த உச்சயினி நகரில் **சார்பிலன்** எனும் சதுர்மறை வேதியனொருவன் வாழ்ந்து வந்த

ணன். அவன் நான்மறையும் ஆறங்கமும் கரைகண்ட கவிஞனாயினும், காலவசத்தால் வேசையின் வலையிற் சிக்கலானான். சிக்கிய பின்னருக்கெல்லாம் அச்சீரிய புருஷன் தன் கைப்பொரு ளெல்லாங் கொடுத்துக் கல்விகேள்வி முதலாய மெய்ப்பொருளைக் கைவிடுத்து, வேசையின் ஆசையெனும் பொய்ப்பொருளில் மயங்கி யுழன்றது கொஞ்சமன்று. சீர்தூக்கிப் பார்க்குங்கால் விளக்கொளியும் வேசையர் நட்பும் ஒரே தன்மையன வாக முடியும். நெய்யற்றவுடன் விளக்கொளி மறை வதேபோல், கைப்பொருள் வறண்டவுடன் வேசை யின் அன்பும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து பறந்துபோம்.

செல்வமும் கல்வியும் குலமும் குணமும் ஒருங்கே இழந்த சார்பிலன் களவுமேற்கொண்டு காலங்கழிக்கத் தயங்கவில்லை. "களவென்பது அறுபால் நான்கு கலை களில் ஒன்றாயிருக்க, அதனைக் கேவலமாகக் கருதுதல் இழுக்கேயாம். அயலானை அடைந்து, அடிமைத் தொழில் புரிந்து, அன்ன முண்ணும் வாழ்க்கையே ஆண்மையற்ற செயல். களவு வாழ்க்கையோ ஆண் மைக்கும் திண்மைக்கும் ஓர் உறைவிடமான கண்ணி யத்தொழிலே. பாவையர்மீதும் பாலர்மேலுமுள்ள பேரணிகளைப் பறித்தல் பாவமேயன்றி, செல்வச் சீமான்களின் மாளிகையிலும், காவல்வாய்ந்த அரண் மனைகளிலும் புகுந்து களவாடுதல் பாவமன்று; ஈன மும் ஆகாது. அளவுக்கு மிஞ்சிய செல்வம் படைத் துள்ள மக்களின் பொருளை வறுமையாளர் பறித்துப் புசித்தல் பொருந்துமென்றே பெரியோர் புகல்வர். அசுவத்தாமா முதலிய அறிஞரும் ஒரு சமயம் களவை மேற்கொண்டன ரென்றால்,நாம் இதனைக் கைக்கொள்

ளுதல் இழிவாகாது," என்றே அச்சார்பிலன் கருதி அத்தொழிலில் இறங்கினன்.

நான் மறையாளனை அச் சார்பிலன் தனது புதிய தொழிலில் கொண்ட தேர்ச்சியும் காட்டிய நேர்த்தியும் வியக்கத் தக்கனவாம். மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம் முதலிய எண்வகை உபாயங்களிலும் அவ னுக்கு இணை யாருங் கிடையாது. மந்திரத்தை ஓதி, மாந்தர் கண்ணில்படாது, மாளிகை வாயிலில் அவன் மாயமாய்ப் புகுவான். களவுத் தெய்வத்தைத் துதித்து கையில் கிட்டியபொருளைப் பிறருக்குக் காட்டி உடனே கனவேகமாய் அவன் தப்பிச் செல்லுவான்; மருந்தை எடுத்து வீசிக் காவல் மக்களை மயக்கி, மண்ணில் வீழ்த் துவான். தந்திரத்தைக் கையாண்டு, மண்ணிலிருந்த வண்ணம் விண்ணில் வாழும் தேவர் பொருளையும் கவரும் வகையிலும் அவன் கைவந்தவன்.

ஒரு சமயம் அக்கள்வர் திலகம் பகல்பொழுதில் தூதவடிவங் கொண்டு, கொற்றவன் வாயிலில் புகுந் தும், இராப்பொழுதில் மாதர் வடிவந்தாங்கி, அந்தப் புரத்தில் நுழைந்தும், விளக்கு நிழலிலே பள்ளியறை யில் பதுங்கி யிருந்தும், வேந்தன் மார்பிலிருந்த வைர மாலையை வாங்கினன் விரைய. துயிலுணர்ந்த இறை வன் தன் தோளில் மாலைகாணமல், உடைவாளை உருவி யோங்க, அதுபோழ்து களவுநூல் கவிஞன் அவ்வா ளின் உறையைக் கையிலே வாங்கி, வேந்தன். குத்துந் தோறும் வாளில் உறையைச் செறியாநின்றான்; பின்பு மற்போரால் மன்னன் வலியின் எல்லையைக் காண, ஆங்கிருந்ததோர் தூணைத் தானகக் காட்டிக் காவல னது அறையைவிட்டுத் தப்பிப் போயினான். மற்றொரு சமயம் மகிபனது உறையுள் அம்மறையவன் புகுந்து,

களவுத் தொழில் புரிகையில், காவலன் கண்விழித்து, உடைவாளை எடுத்துவீச, அவ்வாளுடன் மறைந்து போயினன். அரசனும் பிறரும் எங்குந் தேடியும் அவன் காணப்படவில்லை.

இத்தகைய திறமைவாய்ந்த வேதியக் கள்வன் **மதனிகை** எனும் கணிகைமீது ஆவல்கொண்டுழல, அவளோ "அடிமுதல் சிரம்வரை அணியத் தகுந்த ஆபரணம் பலவும் கொண்டுவரின் ஆவல் கைகூடும்," என்றோதி யனுப்பினள். சாருதத்தனும் மைத்திரேயனும் இசையின்பம் செவிமடுத்த பின்னர், வீடு திரும்பி அயர்ந் துறங்கும் வேளையில், அம்மாளிகையின் பின்புறம் கன்னம்வைத்து உள்ளே புகுந்தான் சார்பிலன்.

பின்னர், ஆங்கிருந்து முன்கட்டுக்குச் செல்ல வேண்டி, மற்றொரு சுவரில் கன்னமிடும் வகையை அவன் ஆராயலாயினன். சுவரை அளந்தறிதற்குரிய கயிறு கொணர மறந்த அக் கள்வன் சற்றே மயங்கி, "என்ன மறதி! போகட்டும்! நமக்குப் பூணூல் இருக்கையில், கயிற்றுக்காகக் கவலை ஏன்? கன்ன வாசலை அளவிட்டுக் கன்னம் வைக்க உதவாவிடின், இந்நூல் இருந்தும் யாது பயன்?" என்றெண்ணியவனாய், அம் மந்திரநாண் கொண்டு, அளவு கண்டு, அழகமைய விசித்திரமான வகையில், கன்னம் வைத்தனன்.

பின்பு அப்பூசுரன் தன்னைப் போன்ற பிரதிமையொன்றைக் கன்னவாயினூடு விடுத்து, உள்ளே செல்லின் ஆபத்தில்லை என்றுணர்ந்ததும், தானே உட்புகுந்தான். ஆங்கே சாருதத்தனும் மைத்திரேயனும் மெய்ம்மறந்து உறங்கி யிருந்தனர். அவர்களின் தூக்க மிகுதியை உணரக் கருதிப் பூனைபோல் அவன் கத்திப்

பார்த்துப் பரீட்சித்தான். ஒருவரும் துயில் நீங்கி எழுந்திருக்கவில்லை. உடனே உட்சென்று வெற்றறையா யிருந்தது கண்டு வருந்தி, "என்னே! மாளிகையின் உயர்ச்சி கண்டு மதிமோசம் போயினோம். பரம ஏழையின் வீட்டில் புகுந்தோமே!" என்று அவன் மனம் புழுங்கினன். அப்பால், பூமியில் புதைத்துள்ள திரவியத்தைப் புலப்படுத்தும் குளிகையொன்றை எடுத்துருட்டினன் அக் கள்வன். உலர்ந்த மரம்போலுள்ள சாருதத்தன் மனையகத்தில் பணம் புதைத்து வைக்கப் பெற்றிருக்க வழியேது? மலை கல்லி எலியும் கிடைக்கப் பெருதவன்போல் சார்பிலன் சோர்வுகொண்டு நின்றனன்.

அவ்வேளை, "இனி எத்துணைநாள்தான் இதனை வைத்துக் காப்பதோ தெரியவில்லையே! இதனால் எனக்கு ஊணும் உறக்கமும் போயினவே. நண்ப! இப் பொறுப்பை நீயே ஏற்றுக்கொள். என்னிடம் வேண்டாம். கையை நீட்டு! பத்திரம்! பத்திரம்!" என்று சாருதத்தனிடம் உண்மையில் தருவதாகவே பாவித்து, நித்திரை மயக்கத்தில் முடிப்பைக் கொடுக்க எத்தனித்தான் அம் மைத்திரேயன்.

அப்போது ஒருகை அதனை ஏற்க நீண்டது. அக் கையைச் சாருதத்தனது கையாகக்கருதி, உறக்கமிகுதியில் நகை முடிப்பை அவன் கைவிட்டான். கன்னம் வைத்து உட்சென்றும், ஒன்றும் இல்லையே என்று ஏங்கியிருந்த சார்பிலன் அப் பெருமுடிப்பை இலகுவில் பெற்றுக்கொண்டு, "தேடிச் சென்ற சஞ்சீவி காலிற் சிக்கியதே போலாயிற்று. மேலும், நம் மதனிகைக்கு வாக்களித்த வண்ணம் நகைகளும் கிட்டிவிட்டன; இனி நம் சொல் பழுதுருது; நமது கருத்தும்

கைகூடும்" என்று கருதிக் களிகூர்ந்து, கணப்பொழுதில் அவ்விடம் விட்டகன்றனன்.

மறுதினம் பொழுது புலர, இராதை வழக்கம் போல் வீடு விளக்கும்பொருட்டு அதிகாலையில் வந்தனள். தான் வருவதற்கு முன்னரே வாயில் கதவு முதல், கடைப்புறக் கதவுவரையில் திறந்திருந்தமை கண்டு, அவள் திகில் கொண்டு, முற்றங் கடந்து சென்று, நாற்புறமும் நோக்கினள். அவ் வீட்டுப் பின்புறச் சுவரில், கன்னவாசல் கண்டதும் அப்பணிப் பெண் அலறி ஓடி வந்து, "அந்தோ! மோசம் வந்ததே! இவ் வீட்டில் எவனோ கள்வன் நுழைந்து களவாடிச் சென்றனனே!" என்று மைத்திரேயன் முதலானோரை எழுப்பினள். அச் சந்தடி கேட்டுச் சாருதத்தனும் கண்மலர்ந்து கடுகி யெழுந்தனன்.

கன்ன வாயிலருகே சென்று நோக்கியதும் சாருதத்தன், "என்னே இக்கள்வன் கைத்திறம்! கன்ன வாசல் ஒவ்வொன்றும் களவு நூல் தேர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்! ஒரு வாயிலோ தாமரை முகிழ் போலுளது; மற்றொன்றோ முழுமதியின் வடிவமாகத் திகழ்கின்றது; இன்னொன்றோ பூரண கும்பமெனப் பொலிகின்றது; வேறொன்றோ சூரிய மண்டலம் போல் சோபிக்கின்றது. அந்தோ! களவு நூல் கை வந்த இக் கவிஞன் வெறுங்கையுடன் நம்மை வைது கொண்டே போயிருப்பான். நம்மிடம் பொன்காசு இல்லாமற் போயினதே. அவன் கைத்திறத்தை நோக்க நோக்க, ஏற்ற பரிசில் வழங்க ஆர்வம் பிறக்கின்றது, என் செய்வோம்? அக் கள்வனிருக்குமிடம் புலப்படின், அவனைக் கண்டு வாழ்த்துரையேனும் கூறி வரலாம்," என்று கழிவிரக்கம் கொண்டனன்.

# 6. மங்கல மனைமாட்சி

சாருதத்தன் இல்லத்தில் களவென்ற கூக்குரல் பிறந்ததும் அண்டை அயலில் உள்ளார் வந்து சூழ்ந்து கும்பு கூடினர். அவ்வேதிய வித்தகனது மனநிலை கண்டதும், "இவர் தெய்வப் பிறப்பேயன்றி வேறன்று. 'கள்வனுக்குப் பரிசாகக் கூடிய யாதொன்றும் இம் மாளிகையில் இல்லாது போயிற்றே!' என இப் பெரியார் வருந்துகின்றார். கொடையில் சிறந்த கன்னன் ஒருவனே இவரை நிகர்த்த வள்ளலாகலாம். வில் விஜயனது அம்புபாய்ந்து ஆவிபோம் தருணத்திலும், வந்தடைந்த வேதியனுக்கு ஈந்துவக்க ஏதொன்றும் இலதேயென அக்கர்ண மகாராஜன் கலங்கினான். இவரோ களவுநூல் கவிஞனுக்கு வெகுமதி தர வகையில்லையே என்று மறுகுகின்றார். இத்தகைய பெருந்தகையாரிடம் வறுமைமகள் வந்து குடிகொண்டது மா பாவம்! பாவம்!! பொருட்செல்வம் இவரிடம் இல்லையாயினும் அருள் செல்வம் நிரம்பியுளது," என்று பலரும் பேசி நின்றனர்.

சாருதத்தனது மனமாண்பு கண்டு, பேதுற்று நின்ற மைத்திரேயனுக்கு வசந்த சேனை வைத்துப் போன நகை முடிப்பு ஞாபகத்துக்கு வரலாயிற்று. உடனே அவன் தன் தோழனை நோக்கி, "ஐய! நான் தங்களிடம் நேற்றிரவு கொடுத்த நகைகள் பத்திரமாக இருக்கின்றனவா?" என்று வினவினன். அதனைப் பெற்றதாகத் தனக்கு ஞாபகமில்லையே என்றான் சாருதத்தன். உடனே மைத்திரேயன் திகில் கொண்டு எங்கும் தேடியும் நகைமுடிப்பு தென்படவில்லை. கன்னமிட்ட கள்வனே அவற்றைக் கவர்ந்து சென்

றிருத்தல் வேண்டுமென மைத்திரேயன் நிச்சயித்தான். வசந்த சேனையின் நகைகள் களவாடப் பெற்றன என்று கண்டதும், சாருதத்தன் ஒரு விதத்தில் ஆனந்தம் அடைந்தனன். வெறுங்கையுடன் கள்வன் செல்லவில்லை என்று முதலில் எண்ணி, மனம் தேறினான்; மறுகணத்தில் வசந்த சேனையின் நகைக்கு வழி யாது? என மனவாட்டங்கொண்டு உன்மத்தனே போல் நிற்கலானான்.

"ஆ! நமது வறுமையில் இதுவும் ஒரு சோதனையாகவல்லவோ முடிந்தது? நமது வீட்டில் நகைகள் மாத்திரம் களவுபோயிற்றென்றால், யாவர் நம்புவார்? நாமே அதனை எடுத்துக்கொண்டதாகத் தான் உலகம் நினைக்கும், மேலும் வசந்தசேனைக்கு நாம் எங்ஙனம் ஈடு செய்வது? இதனை நினைக்குங்கால், என் மனம் எரியிலிட்ட மெழுகுபோல் உருகுகின்றது. பொருளிலான் புவியில் வாழ்தல் புன்மைக்கே இடமாம். பொருளின்றி நிந்தைக்கு ஆளாவதினும், உயிர் பொன்றி வீழ்தலே மேலாகும்," என அவ் விப்பிர சிகாமணி சிந்திக்கலானான்.

கணவன் கலங்கி நிற்பதைக் கற்புடைய மனைவி தூதிகை அறிய வந்தனள்.

குடநீரட்டுண்ணும் இடுக்கட்போழ்தும்
கடல் நீரறவுண்ணும் கேளிர்வரினும்
கடனீர்மைக் கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனை மாட்சியாள்

எனும் நாலடிச் செய்யுள் அந்நங்கையை நோக்கியே எழுந்ததுபோலும்! கடல்போல் பரந்த செல்வம் படைத்த கணவன் கையிலொரு காசுமின்றிப் போயினனே என்று அவள் என்றும் துக்கித்ததில்லை. காலங்

தள்ளுவதே கஷ்டமாகத் தோன்றிய நாள் தொட்டுத் தனது அணிகலன்களில் ஒவ்வொன்ருக மைத்திரேயன் மூலம் அம்மாதராள் விலக்குமாறி விருந்தினரையும் விருப்புடன் போஷித்து வந்தனள். எப்பணியால் காதலன் இன்புறுவானே அப்பணியால் அவனை இன்புறுத்தி வருவதில் அவள் இம்மியும் தவறியதில்லை.

வசந்த சேனையின் நகைகள் காணுமற்போயின என்றறிந்ததும், மைத்திரேயனை அத்தையல் நாயகம் வரவழைத்து, விலைமதிக்க வொண்ணுத இரத்தினு வளியை அவனிடம் கொடுத்து, "ஐய! சென்ற மகேசுவர பூசையன்று இதனை உமக்குத் தானம் செய்ய மனத்தில் வரித்துவிட்டேன். அன்று உம்மைக் காணு ததால் இதுவரையில் அடியாள் இதனை வைத்திருக்க நேர்ந்தது. ஆதலின் இதுபோழ்து இரத்தினமாலையை ஏற்றுக்கொள்வீர்," என்று வேண்டிக்கொண்டனள். மைத்திரேயனுக்கு இதன் உண்மை முதலில் எளிதில் விளங்கவில்லை. "திடீரென்று இம்மாது நம்மை யழைத்துப் பரிசளித்ததற்குக் காரணம் ஒன்றிருத்தல் வேண்டு" மென்று அவன் ஆழ்ந்து யோசித்தனன்.

மனைவியின் அணியை வாங்கித் தன் மானம்காக்க ஒருநாளும் சாருதத்தன் உடன்படான். மைத்திரேயனுக்கு மாலையை அளித்தால், அவன் அதனைத் தன் நண்பனுக்கு உதவுவான். கணவன் கலக்கம் தற்சமயம் நீங்கும் எனவே அம்மாது தனது இரத்தினுவளியைத் தானமாக அளித்தனள். இதனை முடிவில் யூகித்தறிந்தான் நண்பன் மைத்திரேயன். உடனே சாருதத்தனிடம் வந்து, இரத்தின மாலையை முன்னே வைத்து, "அன்ப! நீ முன்னம் மாலையிட்டுக் கொணர்ந்த இரத்தினத்தின் மாலை இது. இதனைக் கொண்டு வசந்த

சேனையின் களவுபோன நகைக்கு ஈடு செய்யலாம்" என்றனன் இன்னுயிர் அன்பன்.

"நமது எளிமைத் தனத்திற்கு இரங்கி நம்மனைவியும் தன் மணிமாலையைக் கொடுத்து அதனால், நாம் நம் கடனைத் தீர்க்கும் காலம் வந்ததே," என அத்தீதிலான் மனம் நொந்தான். ஆனால், "இத்தகைய மனைவியும் மைத்திரேயனைப் போன்ற சிநேகனும் உள்ள வரையில், நாம் ஏன் ஏழையெனக் கருதவேண்டும்," என ஒருவாறு அவன் தேற்றங்கொண்டனன். பின்னர், "மைத்திரேய! இக்கணமே இதனை எடுத்துச் சென்று, வசந்தசேனையின் நகைகளுக்கு ஈடாகக் கொடுத்து வா," என்று கூறினன் சாருதத்தன். சின்னேரத்துக்கெல்லாம் செல்வதாக அச்சிநேகன் செப்பினன்.

## 7. கவிஞன் களிப்பு

**ம**தனிகை என்னும் மாதின் மீதுள்ள காதலால் தூண்டப்பெற்ற சார்பிலன், களவு செய்தேனும் அக்கன்னியைக் களிப்பிக்கக் கருதியே, சாருதத்தன் வீட்டில் நுழைந்தான். அவனது அதிருஷ்ட வசத்தால், வசந்த சேனையின் நகைகளை மைத்திரேயன் மூடிப்புடன் கைவிட்டனன். அதனைப் பெற்ற சார்பிலன் உடனே தன் காதலியிடம் விரைந்துசெல்ல, அவளோ வசந்த சேனையின் மாளிகைக்குச் சென்றிருந்தனள். உடனே அவன் அம்மாளிகை சென்று, அதன் அமைப்பும் வனப்புங்கண்டு திகைக்கலானான்.

ஏழடுக்கு உப்பரிகையும் ஏழு கட்டும் வாய்ந்த அந்த மாளிகைக்குட் செல்லுதல் எளிதன்று. அகன்று பரந்த அதன் எல்லைக்குள் நுழையும் வழியில்

புஷ்பச் செடிகள் மலர்களைச் சொரியா நிற்கும். அவற்றின் ஒழுங்கும், அழகும் கண்டு, எவரும் வியப்புக் கொள்ளாமல் இரார். சுற்றும் எழுந்த மதில் சுவர்களில், முற்றும் பல் வகையான ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. வாயில் படிகளின் வெண்மையும், கருங்கல் சிலைகளின் வண்மையும், பளிங்குப் பீடங்களின் தண்மையும், செல்வப் பெருக்கின் உண்மையை உணர்த்தா நின்றன. இருமருங்கிலும் மா, பலா, வாழை, முதலிய கனிமரங்கள் கவின்பெற வளர்ந்திருந்தன. சிறுகிரி யிரண்டு நிற்பதேபோல், இருமருங்கிலும் கரிமாக்கள் நின்று காவல் புரிந்தன.

முதல் கட்டினைக் கடந்து அடுத்தகட்டில் நுழைந்தான் சார்பிலன். தாமரைத் தண்டுகளோ, சந்திரனது பரிவட்டமோ, என்று ஐயுறுமாறு வெண்ணிழைக் கோலங்கள் ஆங்கே கண்ணைக் கவர்ந்தன. பளிங்குக் கற்களாலான நடனசாலை, கண்ணாடிபோன்று வழவழவென்றிருந்ததால், நடப்பவர் கால்கள் கூச்சம் கொண்டன. இடையிடையே, படிக மணிகள் கோர்த்த முத்துச் சரங்கள், சாளரங்களையும் ஜன்னல்களையும் அலங்கரித்தன. மூன்ருவது கட்டிலோ மழமழவெனச் சீவி விட்ட கொம்புகளில் நறுநெய் தடவப்பெற்ற கொழுத்த காளைகளிரண்டு வெள்ளி மலைகள்போல் வண்டியில் பூட்டியவண்ணம் விரைத்தன. சண்டை ஆட்டுக்கடாக்கள் சலங்கை கட்டிய கொம்புகளை ஆட்டி நின்றன. சேணமிட்ட புரவிமீது உரையிலிட்ட கத்தியோடு, கருத்திருண்ட கண்ணைக் கொட்டாது சேவகரிருவர் காவல் புரிந்து நின்றனர்.

அம் மாளிகையின் நாலாவது கட்டில் பலவித ஆசனங்களும் தவிசுகளும் வரிசை வரிசையாக அமைக்

கப் பெற்றிருந்தன. வசந்த சேனையைக் காண விரும்பி வரும் கானசிகாமணிகளுக்கெனவே அப் பீடங்கள் அமைக்கப் பெற்றவையெனத் தெளிந்தான் சார்பிலன். பாணரும் பிறரும் வந்து, வசந்தசேனையிடம் பணமும் பரிசும் பெற்றுச் செல்லுமிடம் அதுவே.

நாற்புறமும் தாழ்வாரம் இறக்கி, அதில் பனி, வெயில், மழை முதலியவை புகாதவாறு தடுக்கப்பெற்றிருந்தது. அழகாக அமைந்திருந்த மரப்பெட்டிகளில் அடுக்கடுக்காகக் கட்டிவைத்திருந்த ஓலைச் சுவடிகள் எண்ணத் தொலையா. கலைமகளுடன் உறவாடிப் பொழுது போக்குவதற்காக அங்கே வரும் பாவலருக்கென விதித்திருந்த பலவித மஞ்சங்கள் பார்ப்போரின் கண்ணைக் கவரா நிற்கும். சலவைக்கல் மேஜைமீது விரித்து வைக்கப்பட்ட ஓலைச் சுவடிகள் வைத்த வண்ணமே இருந்ததைக் கண்டான் சார்பிலன்.

கணிகையர் பலர் தனித்தமர்ந்து களித்துப் பேசிக் காலங்கழிப்பதற்குரிய இடமும் ஒரு பக்கமிருந்தது. சிலர் அங்குப்பேசி நிற்பதைச் செவிமடுக்கும் கிள்ளைகள் எதிர்மாறு உரைப்பக்கண்டு பலரும் திகைத்து நிற்பர். அமிழ்தினுமினிய அவர்தம் வாய்மொழியை அடிக்கடி கூறும் கிள்ளைகளின் குரலைக் கேட்டு அனைவரும் குலுங்கக் குலுங்க நகைத்து மகிழ்வர்.

இந்திரன் தனுவைப்போல் ஏழுவித வர்ணங்கள் வாய்ந்த திரைச்சீலைகள் எங்கும் தொங்கவிட்டிருந்தன. ஆங்கே சிற்பிகள் ஓவியம் தீட்டுவதிலும், பொன்கொல்லர் நன்முத்தைக் குடைந்து மாலைபுனைவதிலும், சிலர் வைரத்துக்குப் பட்டை தீர்ப்பதிலும், கவனம் செலுத்தினர்.

இவையனைத்தையும் மேற்பார்வை செய்யும் காரிகையைப் புடைசூழ்ந்துநின்ற ஏவல்மகளிரோ பலராவர். பாரசீகப் பன்னீரில் நானமாடும் மின்னனையளான வசந்தசேனை வீசி நட்க்கையில் விசிறிகொண்டு பலர் வீசிச்சென்றனர், மற்றொரு மாது அவளுக்கு வெற்றிலை மடித்துத் தட்டில் வைத்துக் காத்துநின்றனள். பணிப்பெண்கள் பலரோ தங்கக்கிண்ணங்களில் மதுவர்க்கங்களை நிரப்பி, இருகரங்களிலும் ஏந்திச் சென்றனர்.

அங்கும் மதனிகையைக் காணாது சார்பிலன் சோர்வடைந்தான். மாடப்புறவும் ஆடுமயிலும் கூவுங்குயிலும் வாசம் செய்யுமிடமாகத் தோன்றியது, அதற்கடுத்தகட்டு. ஆங்கு விருந்தினரில் பலர் வயிறார உண்ட களிப்பினால் கல்கட்டிலில் சாய்ந்து, அடைக்காய் மென்று கொண்டிருந்தனர். அவர்கள் அடிக்கடி ஓதும் வேதவாக்கியங்களைக் கிள்ளைகள் முறைவைத்துச் சொல்வதுபோல் மொழியாநின்றன. கோகிலங்களோ மறைவாயிருந்து மாந்தளிரைக் கொத்தித் தள்ளிக் களிப்புக்கொண்டன. குரங்குகள் ஜம்புநாவலைத் தின்று கொட்டைகளை இங்கு மங்கும் நோக்குபவர் மீது விட்டெறிந்தன. அங்கங்கே தந்தமுளைகளில் தொங்காநின்ற பொன் கூடுகளில் தூங்கும் பறவைகளோ துறவிகள் நிஷ்டையிலிருப்பது போன்றன.

ஏழன்கட்டு வாகனங்களை நிறுத்தும் விடுதியாம். கலகலவெனச் சப்திக்கும் சலங்கைகள் கட்டின காளைகள் பூட்டிய வண்ணம் மாட்டுவண்டியும், குதிரைகள் கட்டிய இரதமும், நவரத்தினக் கற்களிழைத்த பல்லக்குகளும், பதவிக்குத் தக்கவாறு அலங்கரிகப் பெற்றுக் காத்திருந்தன.

ஓங்கி உயர்ந்த மாமரத்தின் தாழ்ந்து தழைத்த கிளைகளிலே வீசியாடும் ஊஞ்சல்களில் சிறுர் பலர் களியாட் டயர்ந்தனர். இழைத்த பல மரத்தூணுல் இணைத்த சிறு மண்டபங்களில் குலவிக் களித்தும் பாடல் பாடியும் பொழுது போக்கினர் சிறுவரும் சிறுமியரும். தோட்டமும் துறவும் அடர்ந்த பசும் புற்றரையும், தழைத்த பழமரங்களும், குலுங்கும் கனிவர்க்கங்களும், நிறைந்து புள்ளினம் பலவும் புழங்கும் அப் பூஞ்சோலையில் புகுந்த துறவியரும் பின்னர் வெளிவரச் சம்மதியார். எனின், சாமாலியனுன சார்பிலன் இறும்பூது கொண்டு நின்றது வியப்பன்றே!

இத்தகைய வனப்பும் செல்வமும் ஒருங்கேவாய்க் கப்பெற்ற வசந்தசேனையின் மாளிகையில் திசைதப்பி நின்ற சார்பிலனது தோளில் மெல்லியலா ளொருத்தி தன் சில்லென்ற காந்தள் விரலால் தீண்டினள்.

## 8. தாதியின் தகவு

**மலர்க்கரம் பட்டவளவில் மதிமயங்கினுன் மறையவன்.** பின்னர் அவ் வந்தணன் திரும்பினுன் திகைத்து. கண்டான் மதனிகையை. உடனே “இக் காமன் தோட்டத்தில் நீர் களவாடப் போவதென்னே?” என்று அவள் வினவினள். அவனது கள்ள எண்ணம் அவனது இதயத்தைப் பிளந்தது; நெஞ்சம் படபடத்தது தனது **வாழ்க்கையின் மர்ம**த்தை அம் மதனிகை அறிந்தே கூறினளோ என்று அவன் ஐயுற்ருன். “காமன் தோட்டத்தில் இத் தீங்கனியைத் தவிர யான் வேண்டுவதொன்றில்லே. அத் தெவிட்டாக் கனியைத் தேடி இதுவரையில் காணுமல் அலேந்து அலமந்தேன்,” என்ருன் சார்பிலன்.

“கவலைகளை யெல்லாம் காததூரத்தில் விரட்டும் இடமன்றோ இது! சாருதத்தன் வசந்தசேனையைக் கண்டதும், இதே தோட்டம்! இதே தருணம்! கண்டதும் அவனைக் கணவனாகக் கருதினள் அத்தோகை நல்லாள். அப்போது, அத்தையலோ கன்னி கழியா திருந்தனள். இருக்கவே, அன்றே தன் ஆவியும் உடலும் மற்றுமெல்லாம் அவனுக்கே பரிந்தளித்தனள்; அவனைவரித்தபின் பிறரை அவள் வெறுத்தாள்; தன் குலத்தொழில் மறந்தாள்; குணக்குன்றே யனையானை அவள் காணாத நாளில்லை. அவன் ஏழ்மையடைந்தும் அவள் தாழ்மை கூறவில்லை. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தன்னை யிகழ்வார்க்கும் இன்னல் புரியாது, மற்று இசைந்தளிக்கும் வள்ளலென்று சாருதத்தனைப் போற்றாத நாளெல்லாம் பிறவா நாளாகவே அவள் கருதுவாள். இரக்கமின்றிப் பொருள் பறிக்கும் பரத்தையரை இழித்துக் கூறுதல் அவளது இயற்கை. ஆசைக்கே அடிமையாகி, அறத்தைக் கைவிட்ட அறிவிலிகளைக் கண்டால், அவள் நஞ்செனஅஞ்சுவாள்;” என்றனள் மதனிகை.

“காசுதனைக் கணிகையர் வெறுப்பரென்பது வெளிக்கே! உண்மையில் சூதையும் கள்ளையும் ஒக்கும் இவ்வனிதையர்பால் காசாசை இல்லையெனின், உலகம் நகும். நம்பால் இவள் கூறும் பெருமையனைத்தும் சொல்லளவே. கல்லாத இம்மங்கை எனக்குக் குலநலம் பேசப் புகுந்தாள். நல்லை! நல்லை! அறச்சமர்த்தி நீயே! கண்டேன்,” என்றுன்னிய அக்களவு நூல் கவிஞன், “நகைகளை நேரில் கண்டதும் நங்கை மயங்குவள்” என்று முடிப்பை அவிழ்த்து, மதனிகையின் முன்னே வைத்தனன்.

பின்பு, "மதனிகே! நீ கூறிய தொன்றும் என் காதில் விழவில்லை. உன்பொருட்டு யானிதுவரை ஊண் உறக்கமுன்றிப் பட்ட கஷ்ட நஷ்டம் பரமனே யறிவான். உரைத்துப் பயனென்ன! உனக்கெனக் கொணர்ந்தேன் இப்பொருளை. இதனை நீ இன்புடன் அணிந்து, என்னை அனுப்பிவிடு. இதனை ஈட்டியதன் அருமையை அறிந்தாயாகில், யான் உன்பொருட்டுச் செய்த தியாகம் புலப்படும். இராஜ தண்டனையை மீறினேன். குல தர்மத்தையும் கைவிடுத்தேன்," எனக் கூறி நின்றான்.

மதனிகை அந் நகைகளைக் கண்டு, "அடா பாவி! என்ன காரியம் செய்துவிட்டாய்! சாருதத்தர் உயிருடன் உளரா?" என்று கவலையுடன் வினவினள்; பின்னும் "உயிருக்கே உலைவைத்துக் கொண்டனையே! இந் நகைகள் இல்லையென்று யார் அழுதது!" என்று வெறுத்து நோக்கினள். சார்பிலன் இடியுண்ட நாகம் போல் அறிவழிந்தான்.

அப்பால், சர்ப்பம்போல் சீறிவிழும் சிறுமியை நோக்கி, "உன் பொருட்டாக என்னுயிரையும் ஒரு துரும்பாய் மதித்து, அரசனது ஆணைமீறி, அந்தணரது குல தர்மத்தை நீத்து, நூல் வழியே களவாடிக் கொணர்ந்த விலையுயர்ந்த நகைகளைக் கண்டு, நகையாது ஏசுகின்றாய். உனக்கு இரக்கமில்லையோ! யான் கொண்ட நன்றியும் பிறவும் விழலுக் கிறைத்த நீராயினவே! நாரிகளை நம்புவோர் என்னைப்போல் நடுத் தெருவில் நிற்பரெனக் கூறுதல் முக்காலும் உண்மையாம்! குல மரங்கள் அழிவெதெல்லாம் பரத்தையர் எனும் கோடரிகளால் அன்றோ? கொடிய நெருப்பையும் நம்பலாம். ஆசைக் கன லூட்டி இவ் வுடல்

கட்டையினைக் கரியாக்கும் இத்தீயர்பால் நெஞ்சம் நாடாத வண்ணம், தன்னைக் காத்தலே நன்மை பயக்கும். இதனை யறியாது இத் தீயிலே இளமையில் குளித்து, குளிர் திங்கள் எனக் காய்ந்தேன். காசையும் கொட்டிப் பின்பு காலில் விழுந்தும், கருணை என்பது மருந்துக்கும் இல்லாத காரிகையரால் கலியடைந்தேன். இனி, எக்கதி நேருமோ எனக்கு? இத்துணை நாள், உன்னைச் சிந்தித்ததில் யான் பெற்றதொன்றுமில்லை. இதில் ஒரு கணமேனும் ஈசனைக் கருத்தில் பதித்திருந்தால், நற்பேறு பெற்று உய்யலாம். சிறுமியர்மீதும் செல்வத்தினிடமும், நம்பிக்கை வைப்பவன் நிர்மூடனுவன். பாம்புக்குட்டிகள் போல் இவ்விரண்டும் ஓரிடத்திலும் நிலைத்து நில்லாத் தன்மையன. பூவென்ருலும், அது இடுகாட்டில் பூத்ததென்ருல், பூசைக்கு உதவாது காண்; மாலை உண்டுபண்ணும் கணிகையரது ராகமும், மாலையில் தோன்றும் மேகத்தினது ராகமும், மாறுபட்டுக்கொண்டேயிருக்கும். பணம் பெறும்வரை பரிந்து பேசிப் பின் பழம் பிழிந்தெடுத்த சக்கையைப்போல், புறத்தெறியும் பாவையர்பால் பிரியம் வைப்பது மடமை! மடமை! மலையினுச்சியி லுள்ள கற்பாறைமீது தாமரைப்பூவை நட்டால் வளருமோ? உன்மீது யான் வைத்த அன்பெல்லாம் அதன் அளவேயாக நின்றது,'' என்று மனம் போனவாறு முறையிட்டான் சார்பிலன்.

அங்ஙனம் பிதற்றின பார்ப்பனப் பதரைப் பார்த்து, மதனிகை சிறிது புன்னகை பூத்து, "எனது குலத்தைப் பழித்தாய்; குணங்கள் உன் இரு கண்ணுக்கும் புலனுகாது போயினமை எங்ஙனம்? மங்கையர் திலகமாக விளங்கும் வஸந்தசேனையின்

குணமே சாலும். அவளது கருணையும் நட்பும், ஈடும் இணையு மற்றன. மாதரைத் தூற்றுதல் உன்போன் ஞர்க்கன்றிப் பிறர்க்கு ஒவ்வாது. பரத்தையர் என் றும் பணம் பறிப்பவர் என்றும் தூற்றினீர். ஒரு பரத்தை யளித்த பொன்நகைகளை யல்லவா நீர் களவாடிக் கொணர்ந்தீர். அதனை அவளிடமே கொடுத்து, என்னை மீட்கவும் கருதினீர். இது எம்மதத்தின் கொள்கையி லாவது சரியெனின், யான் சம்மதிக்கி றேன். உண்மைநெறி வழாத உத்தமரே! உரைப் பீர்," என்றனள்.

சார்பிலன் தன் நிலையை ஆய்ந்தான்; "வெயிலா லுலர்ந்து நிழலுக்காகச் சென்று, நின்ற மரத்தின் கிளைகளையே கழிக்க முயன்றேனே யான். என்ன! முன் பின் யோசனையற்றேரும்,' என்று உணர்ந்து சாருதத்த னது அருமைக் குணங்களையும் வசந்த சேனையின் பெரு நலங்களையும் மனத்திலுன்னி அறிவழிந்தான். "நான் களவாடியது சாருதத்தனது இல்லம் என்று இதுவரை அறியேன்," என்று அவளுக்கு உண்மையை உரைத்து, "ஒருவருக்கும் இன்னல் இழைத்ததில்லை" என்றும் உறுதி கூறினுன். இனி! "இதற்கென்ன செய்வேன் மதனிகே! நல்லோர் அனைவரையும் பழித் துக்கொண்டேன்! நீயே ஒரு வழி சொல்," என்ருன் அச் சார்பிலன்.

மதனிகை தன் கோபத்தை யடக்க முடியாதவ ளாய், "என்ன தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள். திருடச் செல்லும்போது என்னைக் கேட்டுச் செல்ல வில்லையே!" என்றனள். முடிவில் அந்நல்லாள் அவ னது பரிதாப நிலைகண்டு இரங்கி, "நான் சொல்வது போல் செய்வீராஞல், இருவரும் நலம் பெறலாம்.

இந்நகைகளை இவ்வண்ணமே வசந்தசேனையிடம் சென்று, சாருதத்தன் அனுப்பியதாகக் கொடுத்து விடும். இது ஒரே வழிதான் உண்டு," என்றனள்.

அவளது யூகத்தைக் கண்டு, சார்பிலன் வியந்து, "புருஷரைவிடப் பெண்டிருக்கு யூகம் உண்டென்பர் அறிவுடையோர். எம்போல்வரது அறிவு ஏட்டோடு நின்றது. பிறவியிலேயே நீ புத்திசாலி யாகையால் உனக்கே யூகமதிகம்" என்றனன்.

அறநான்கும் அறக்கற்ற அவ்வந்தணன், உயர் குலத்தில் தோன்றிய அவ்வுத்தமன், "ஒரு வேசியின் பாசத்தால் கட்டுண்டு செல்லவும் காலம் வாய்த்ததே!" என மனம் புழுங்கினன். இப் பவக்கடலினின்றும் கரை ஏறத்தக்க உதவி வேண்டி, சாருதத்த நாம மெனும் தோணியைக் கைக்கொள்ள எண்ணங் கொண்டான். இவ்விதம் மனத்தி லெண்ணியவாறே, மதனிகை கூறிய வண்ணம், நகைகளை வசந்த சேனை யிடம் ஒப்புவித்து மீள மனமொப்பிச் சென்றான்.

மதனிகை அவனுக்கு முன்னதாக வசந்தசேனை யிடஞ் சென்று, "நமது தலைவரிடமிருந்து ஓர் அந்த ணர் வந்து, வாயிலில் காத்து நிற்கிறார்;" என்று கூறி னள். உடனே, "ஏன் அவரை உள்ளே அழைத்து வரவில்லை?" என்று வஸந்தாதேவி உரத்துக் கூற, அயர்ந்து நின்றாள் மதனிகை. வசந்தசேனை எழுந்து இரண்டடி பெயர்த்துவைக்கவும், சார்பிலன் உள்ளே சென்று, நகை முடிப்பைத் தட்டில் வைத்து, "இவை களை வேதிய சாருதத்தர் நும்பால் திருப்பியனுப்பி னர்," என்றான்.

"அந்தணர் பெரும! ஆனந்தம்! இந் நகைகள் எனக்குத் தேவையில்லை. உம்மைப் பார்க்கையில் மண

மிலா மகனெனத் தோன்றுவதால், இது உமக்குப் பயன்படும். இதை நீவிர் ஏற்று, உமது திருமணத்திற்கு வைத்துக்கொள்ளும். இதுவே அப்பெரியாரின் கட்டளை," என்று அத்தேவி கூறி, மதனிகையை நோக்க, அவள் வெட்கித் தலைகுனிந்தாள்.

சார்பிலனுக்கு சந்தேக முதித்தது. ஒருக்கால், தானும் மதனிகையும் பேசிநின்றதை வசந்தசேனை அறிந்துகொண்டனளோ, என்று அவன் திகைத்தான். வசந்தசேனை சொல்லுவது உண்மைதானோ என்றும் அவன் ஐயுற்றான். இதற்குள் மதனிகையை யழைத்து "நங்காய்! நீ இந் நகைகளை அணிந்து இவரை மணந்து, இன்பமாய் வாழ்ந்துவருக" என்றனள் வசந்தசேனை.

சார்பிலன் பழம்நழுவிப் பாலில் விழுந்ததேபோல் மட்டற்ற மகிழ்ச்சியோடு மதனிகையை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினான். திரும்புங்கால் நல்லோரிணக்கத்தால் தானடைந்த பலனை நினைத்துப் புளகாங்கிதனானான். இத்தகைய பெரியாரின் வீட்டிலேயே கன்னம் வைத்த என்னைப்போன்ற நன்றிகெட்ட நாயினுங் கடைய குணமே குலத்தினும் மேல். அதனாலன்றோ சந்திரன் சடையில் ஏறியதும் என்று சிந்தித்தே சென்றான்.

## 9. அன்னையும் குழந்தையும்

**மதனிகையும் சார்பிலனும் வசந்த சேனையின் நல்லாசி பெற்று,** அவள் மாளிகை விட்டேகினர். அப்பால் சாருதத்தனது தோழனும் விதூஷகனுமான மைத்திரேயனே தூதிகையின் இரத்தின மாலையுடன், அவ்வீடம் வந்தனன். வந்ததும், வசந்தசேனை அவனை வரவேற்று

உபசரித்து, "உமது நண்பர் சுகமா? வஞ்சகர் அவரை வருத்தாது இருக்கின்றனரா? முன்போல் அவரை நண்பர்கள் நாடுவதுண்டா?" எனப் பல கேள்விகள் அடுக்கினள். அவை யனைத்தினுக்கும் இரு பொருள் படும்படி மைத்திரேயன் பதிலளித்துத் தான் வந்த காரியத்தை முடிக்கக் கருதி, "அம்ம! நமது தலைவர் சதுரங்கத்தில் உமது அணிகலன்களை வைத்துப் பந்தயங்கட்டித் தோற்றுவிட்டார். பிறர் பொருளைப் பணயமாகவைத்து விளையாடுதல் தவறெனை அவரறிந்தும், மதிபிசகித் தோற்றுவிட்டதால் மிக வருந்தி, மன்னிக்குமாறு உங்களை வேண்டிக்கொள்ள என்னை இவ்விடம் அனுப்பினர். தோற்ற நகைக்கு ஈடாக விலையேறப்பெற்ற இவ் விரத்தின மாலையை அனுப்பியுள்ளார். ஆதலின் இதனை ஏற்றுக்கொண்டு எனக்கு விடையளித் தனுப்புக," என்றனன்.

உயிர்த் தோழனிடம் பரிவுகொண்டு, மாசற்ற பொய்பேசி நிற்கும் மைத்திரேயனது பணிவுகண்டு வாசந்திகை புன்முறுவல் பூத்தாள். பின்பு, "அந்நகை எனக்கா சொந்தம்? அவருக்குச் சொந்தமான நகைகளையே அவர் தோற்றார். என் நகைகளையே அவர் தோற்றாலும், அதற்காக நான் வருந்தேன். அப்பாக்கியம் கிடைத்தால் போதுமே. இனி உம்மைப் போன்ற நேசர் அருகிருந்தும், அவர் தோற்க நேர்ந்தது ஆச்சரியமே, இது பற்றியே நான் பெரிதும் வருந்தக் கூடும். நீர் அவர் பக்கத்தில்தானே இருந்திருப்பீர். உமது யோசனையை அவர் ஏற்கவில்லை போலும்?" என்று கூறி மைத்திரேயனை உற்றுநோக்கினள் உள்ளன்புடன்.

உடனே அவன் இரத்தினவளியை எடுத்துநீட்ட,

வசந்தசேனை அதனைவாங்கி இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டு, விலையுயர்ந்த இரத்தின மாலையைப் பரிசளிக்க முன்போந்த அவ் வுத்தமவள்ளலின் உதார குணத்தை நினைந்து நினைந்து மனம் பூரித்தாள்; "குணக்குன்றே! உனக்கு மாலையிட்ட மனைவியே பாக்கியவதி! இது அத்தேவியின் திவ்ய மாலையாயிற்றே! தக்க சமயத்தில் இதனை நாதனுக் குதவி, உமது கடனைத் தீர்க்கவே அத் தையல் நினைந்திருக்க வேண்டும். உள்ளபொருள் எல்லாவற்றுள்ளும் உயர்ந்த பொருளை உதவியது, உத்தம! உம்மீது அவள் வைத்துள்ள அன்பின் பெருக்கேயாம்! இனி, நான் யாரை மெச்சுவது? பர்த்தாவை மெச்சுவதா? அல்லது கணவனது நிலையைக் குறிப்பாலறிந்து கை கொடுக்கும் கோதையை வியப்பதா! ஒன்றுக்கு ஒன்று ஏற்றத் தாழ்வின்றி யொக்கும் விந்தையே விந்தை. இத்தகைய வாழ்க்கைத்துணையை ஒருவன் எய்தப் பெறுவானாயின், இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம் இனிது நடக்கு மென்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. இனி இதையே காரணமாகக் கொண்டு அக் கண்ணியனைக் கண்டு, களவுபோன நகை முடிப்பு கைக்கு வந்த வகையையும் உரைத்துத் திரும்புவோம்," என்று தனக்குள் கருதி, மைத்திரேயனை மனமுவந்து வழியனுப்பினாள்.

மைத்திரேயன் சென்றதும், மாலைப்பொழுதை எதிர்பார்த்தவண்ணம், மஞ்சத்தில் சாய்ந்தாள் வசந்தசேனை. மாலைப்பொழுது வந்ததும், ஐயன் வீடு நோக்கி அவள் புறப்பட்டனள். உடனே வான மிருண்டது; மின்னல் மேகத்தைக் கிழித்தது. இடி பூமியைப் பிளந்தது. கார்வெள்ளம் கரை புரண்டது. வழியோ உரு

மாறியது. உருகிய வெள்ளியைப்போல் தரையில் எங்கும் வானீர் நிறைந்தது. காதலன்பு தூண்டப்பெற்றதனால் ஈதொன்றையும் பொருட்படுத்தாமல் வசந்தசேனை தன்னந் தனியே, அவ் விரவில் நாயகன் வீடு சேர்ந்தனள்.

வசந்த சேனை வந்த சமயம் சாருதத்தன் வீட்டிலில்லை. இல்லாளான நல்லாள் தூதிகையே ஆங்கிருக்க, வசந்த சேனை அவளையடைந்து பணிந்து, பரிவுடன் மாலையை ஈந்தனள். அது கண்டு தூதிகை திடுக்கிட்டாள்.

**வசந்த சேனை**:—அன்னாய்! நான் தங்கள் அகத்தின் அடியாள் அன்றோ? நாதனுக்கு ஊழியம் புரியும் பாக்கியம் எனக்கு இலதோ? களவுபோன சிறு நகைகளினும் இஃது பன்மடங்கு அதிகம் பெறுமே! எவ்வகையாக நோக்கினும், இதனை யான் ஏற்றல் எங்ஙனம்?

**தூதிகை**:—பெண்ணே! உன்தன் தன்மையை உம்பரே உணரக்கூடும். இம்மாலையின் மதிப்பு எம்மாத்திரம்! ஐயனுக்கு நீ அளித்துள்ள மாலையால் அவர் உன்னை நினைந்து, இன்னல் களைந்து, ஆருயிர் தாங்கியிருக்கிறார். மாங்கலியப் பிச்சை கொடுத்த உன் மாலைக்கு இம்மாலை ஓர் ஈடாமோ? அதனுக்குப் பதிலாக இதனை நீ ஏற்பதே தகுதி என்று கூறி, மலர்க் கரம் நீட்டி, இரத்தின மாலையை அவளது கழுத்திலணிந்தாள் கனிவுடன்.

வசந்த சேனை அதுகண்டு ஒன்றும் மறுமொழி கூற முடியவில்லை. இதற்குள் சாருதத்தனும் மைத்திரேயனும் வந்துசேர, நால்வரும் சேர்ந்து, கள்வன் திறத்தையும், அவனே முடிப்பைக் கொணர்ந்து கொடுத்த விதத்தையும் குறித்து, நெடுநேரம் அளவ

ளாவி யிருந்தனர். அன்றிரவு சாருதத்தன் வீட்டிலேயே வசந்த சேனை தங்கியிருந்தனள். பொழுது புலருமுன் சாருதத்தன் எழுந்து, நகர்ப் புறத்தேயுள்ள பூஞ்சோலை சென்றான். வசந்த சேனை எழுந்தவுடன், தன்னைத் தோட்டத்தில் வந்து சந்திக்க வேண்டுமென்று, தாதியிடம் அவன் உரைத்துப் போயினன்.

துயிலுணர்ந்ததும் வசந்த சேனை அச் செய்தியுணர்ந்து, ஆடையணிந்து பூங்காவினுக்குப் புறப்படும் சமயம், இராதை எதிர் வந்தனள். அவளது மருங்கில் இருந்த வண்ணம் உரோகசேனன் அழுதரற்ற, அவன் கையில் மண்ணாற் செய்த விளையாட்டு வண்டியொன்றிருந்தது. சாருதத்தனது சாயலாய்த் திகழ்ந்த சிறுவனது முகமலரை மகிழ்ந்து நோக்கினள் வசந்த சேனை. உடனே அவள், பால் வடியும் அவ்வடிவைக் கண்டு வியந்து, அருமந்த மைந்தனை வாரி எடுத்து, முத்த மிட்டு, உச்சி மோந்தாள். குழந்தை அவளை விட்டுக் கீழே யிறங்கி, இரதனிகையைக் கட்டிக் கொண்டு "இவள் யார்?" என்றனன். "இவளும் உன் தாயார் தான்" என்று கூறினாள் அத்தாதி. அது கேட்ட உரோக சேனன், "இல்லை இல்லை. என் அன்னையானால் இத்துணை நகைகள் எங்ஙனம் இருக்கக் கூடும்?" என்று வினவினன்.

சிறுவனுரை கேட்ட வசந்த சேனை மிகவும் மனங் கசிந்து, சாருதத்தனது பழைய செல்வச் சிறப்பைச் சிந்தையில் கொண்டு, "கால வித்தியாசத்தால் இக்குழவி இங்ஙனம் கூற நேர்ந்ததே," என்று பெரிதும் சிந்தாகுலம் கொண்டனள். இதற்குள் அப் பாலன் மீண்டும் அழுதலறத் தொடங்கினன்.

வசந்தசேனை அதுகண்டு "அப்பா குழந்தாய்! ஏன் அழுகிறாய்! உன்னை யார் அடித்தனர்?" என்று அதன் கண்ணில் வடிந்த நீரைக் கண்டு கனிந்து கேட்டனள். அதற்குத் தாதி, "அம்மா! அயல்வீட்டுக் குழந்தை பொன்வண்டி கொண்டு விளையாடியது. அதுபோல் தனக்கும் ஒன்று தேவையெனத் தேம்பி யழ, நான் பாலனை உள்ளே அழைத்துவந்தேன். இடுப்பிலும் இவன் நிற்கவில்லை. என் செய்வது? பொன் வண்டிக்கு என் ஐயன் எங்கே போவது?" என்றனள். கோழையினிடத்து ஆயுதமும், வறிஞ ரிடத்து உதாரமும், கருமியிடத்துக் கருந்தனமும் கூட்டிவைத்து, ஆட்டிவைக்கும் பரம்பொருளின் திரு விளையாடலை வசந்தசேனை எண்ணிக்கொண்டே, "என் கண்ணே! கண்மணியே! தித்திக்கும் தீங் கனியே! தெவிட்டாத கற்கண்டே! இதோ உன் வண்டியைக் கொண்டுவா; பொன் வண்டியாகச் செய்து தருகிறேன். சற்றே அழாமலிரு!" என்று கூறித் தன் ஆபரணங்கள் அனைத்தையும் வாங்கி, அவ்வண்டி முழுமையும் மறையும் வண்ணம் மாட்டி விட்டனள்.

பளபளப்பாகப் பொலிந்த பொன்னணிகளைக் கண்டு பையன் களிகூர்ந்து கைகொட்டிக் களித்து விளையாடலானான். அவ்வேளை வசந்தசேனையின் இரு நயனங்களினின்றும் நீரருவி பாயத் தலைப்பட்டது. அவ்வானந்தக் கண்ணீரை அழுகண்ணீரெனக் கருதிய குழந்தை, "அழுதுகொண்டே போடும் இந்நகைகள் எனக்குத் தேவையில்லை. இதை நீங்களே திருப்பி எடுத்துக்கொள்ளலாம்," என மழலைச் சொற்களால் மிழற்றினன். வசந்தசேனை அதுகண்டு ஆச்சரியங்

கொண்டு, தனது கண்ணீரைத் துடைத்தவளாய், "ஈசனே! வள்ளலின் வயிற்றுதித்த இக் கான்முளை பாக்கியம் பெறுநாள் எந்நாளோ?" என்று வழுத்தி னள். பின்பு. "என் அப்பனே! நகைகள் போயினவே என்று நான் அழவில்லை. அவைகளை உன் வண்டிக்கே வைத்துக்கொள்" என்று அன்புரை கூறித் தேற்றி னள். உரோகசேனன் உடனே வண்டியை இழுத்துக் கொண்டு வெகு களிப்புடன் வாசலில் விளையாடச் சென்றான்.

இந்நிலையில், வஸந்த சேனை பூங்கா வருவதற் காகச் சாருதத்தன் ஏற்பாடு செய்திருந்த மூடு வண்டி யும் வாயிலீல் வந்து நின்றது. சிறிது நேரத்திற்குள் வண்டியில் வந்தேறுவதாக வஸந்தசேனை கூற, வண் டிக்காரனே தானும் இரத்தின கம்பளத்தை விரைவில் எடுத்து வருவதாகச் சென்றான் வண்டியுடன்.

ஈ திங்ஙனமீருக்க, இறைவன் மைத்துனன் சகார னது வீட்டு வண்டியான மூடு வண்டியொன்று அவ் வீதிவழியே செல்லலாயிற்று. சாருதத்தனது வாயி லுக்கு எதிரே வந்ததும், வழித்தடையால் சற்றே அவ் வண்டியை நிறுத்தினன் வண்டிக்காரன். பின்பு வழித் தடையின் காரணத்தையறிய அவன் முன்னே சென்று நோக்கினன். அவ்வமயம் வசந்தசேனை வெளியே வந்து, காத்திருந்த வண்டி தனக்கே எனக் கருதி அதி லேறிக்கொண்டு திரையை மூடிவிட்டாள். கீழே கவிழ்ந்துகிடந்த முன்வண்டிகளுக்கு உதவச் சென்ற (சகாரனது) வண்டிக்காரன் மீள வந்து, வண்டியி லமர்ந்து ஓட்டிச்சென்றான். இடைநடுவில் நிகழ்ந்த விஷயம் அவன் அறிந்திலன். வழித்தடையால தாம தம் நேர்ந்ததுபற்றி எஜமானன் சீறி விழுவனே என்

றஞ்சியவனாய் வண்டிக்காரன் எருதுகளை வெருட்டி யோட்டக் காளைகளிரண்டும் காற்றினுங் கடுகிப் பறக்கலாயின. வெகு சடுதியில் வேதியத் தலைவனைக் கண்டு களிக்கலாமென அக்காரிகை கருதியிருந்தனள். வினையின் விளைவை எவரே முன்னறிதல் கூடும்?

## 10. புலிவாய்ப் புல்வாய்

சகாரனது மாட்டு வண்டி புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற் கெல்லாம், வசந்த சேனை ஏறி வருவதற்காகச் சாருதத்தன் ஏற்பாடு செய்திருந்த வண்டி, இரத்தின கம்பள விரிப்புடன் குறித்த இடம் வந்து நின்றது; வண்டிக்காரனே வண்டி வந்ததை உரத்து அறிவித்து நின்றான் மீண்டும்.

இது நிற்க, பாலகனது கொடுங்கோன்மை எத்துணை நாள் நிலைத்து நிற்க முடியும்? அவனை அரியணையிலிருந்து அகற்றி, ஆரியகன் எனும் இடையன் அரசாளப் புகுவான் என்று சித்த புருஷனொருவன் செப்பிய செய்தி நகரெங்கு முலாவியது. பாலகன் உடனே ஆரியகனைத் தேடிப் பிடித்து விலங்குடன், சிறையி லிட்டான். ஆரியகனைச் சேர்ந்த சிலரும் பாலகனை வெறுத்த பலரும், வர விருக்கும் வேந்தனை விடுவிக்கப் பெருமுயற்சி புரியா நின்றனர்.

வசந்த சேனையின் மாளிகையிலிருந்து மதனிகையுடன் திரும்பிய சார்பிலன் தனது நண்பன் ஆரியகனது கதியைக் கேட்டவுடன், காதல் மனைவியை ஓரிடத்தில் இருத்திவிட்டு, ஆரியகனை விடுவிக்க ஓடித் தனது மதிநலம் முழுதுங் கொண்டு முயன்றனன். இதன் பலனாக ஆரியகன் விலங்கை முறித்துக்கொண்டு வெளியேற முடிந்தது.

காலகளிலும் கைகளிலும் அறுந்து தொங்கும் சங் கிலிகளோடு ஆரியகன் தன் உயிர்க்குத் தப்பித் தெரு வழியே ஓடி வந்தனன். ஓடுகையில், சாருதத்தனது இல்லம் திறந்திருக்கக் கண்டு அதனுள்ளே நுழையக் கருதினுன். அச்சமயத்தில் தான், சாருதத்தனது மூடு வண்டி இரண்டா முறையாக வாயிலில் வந்து நின் றது. வண்டியின் மூலமாக நகரின் எல்லைப்புறம் சேரலாம் என அவன் துணிந்து, முகத்தை மூடியவண் ணம் போய், அதில் ஏறி உட்கார்ந்து கொண்டனன். கால் விலங்குகளின் ஒலியை நகைகளின் ஓசையென எண்ணிய வண்டிக்காரனும் இரண்டு காலைகளையும் தட்டி விட்டான்.

ஆரியகன் விலங்கு முறித்து வெளியேறிய செய்தி பரவவே, நகரெங்கும் அல்லோல கல்லோலம் உண்டா யது. அரசன் நகர்ப்புற மெங்கும் காவலரை ஏவி, ஒருவரும் எல்லைவிட் டகலாதவாறு உத்தரவிட்ட னன். உடனே சேவகர் பலர் தெருத் தெருவாகத் தேடிச் சென்றனர். ஆரியகன் ஏறிச்சென்ற வண் டியோ நகரின் எல்லையை யடைந்ததும், ஆங்கே காவலிருந்த வீரகன், சந்தனகன் என்போர் வழிமறித் தனர். சோதனைக்காக வீரர் இருவரும் அருகில் நெருங்கியதும், அவ் வண்டிக்காரன் " ஐயா! இது சாருதத்தரது. இதில் வசந்தசேனை எனும் பெண் மணி செல்கின்ருள்," என்று கூறினுன்.

சாருதத்தனது பெயரைக் கேட்டவுடனேயே சோதனைசெய்யாது சந்தனகன் விட்டனன். மற்று அவ னருகிருந்த தோழனே வண்டியினுள் பார்த்தே தீர வேண்டு மெனக் கருதி வழிமறித்தான். உடனே சந்தனகன் வண்டியின் திரையை நீக்கி, உள்ளே

நோக்கலும், ஆரியகனைக் காண அவனுக்குத் திகைப் புண்டாயிற்று. ஆரியகன், "இச்சமயம் என்னைக் காத்தால் உன்னை நான் என்றும் மறவேன், நான் இனி உன் அடைக்கலம். நான் இருப்பதும் இறப்பதும் உன்னையே பொறுத்துள. என்னைக் காட்டிக்கொடாது காத்தல் வேண்டும்," என்று இரக்கலானான்.

சந்தனகன் சற்றே யோசனை செய்து நிற்பதைக் கண்ட வீரகன் சந்தேகித்து, "என்ன யோசனை செய்கிறாய்? யார் உள்ளே இருப்பது? நீ இங்கே வா! நான் சென்று பார்க்கவேண்டும்," என்று கூறி வண்டியின் பக்கம் குறுகினன். அடைக்கலம் புகுந்த ஆரியகனைக் காப்பதே தருமமென நினைத்த சந்தனகன் அவ் வண்டியை விட்டிறங்கினான். வண்டியும் புறப்பட்டது. வீரகனுக்கு மேலும் சந்தேகம் தட்டவே, "சந்தனகா! ஏன் இவ்வளவு தாமதம்? வண்டியில் உண்மையாக யார் இருக்கின்றனர்? நானும் பார்த்துத்தான் திரும்புவேன். நீ சொல்வதைப் பார்த்தால் எனக்குச் சந்தேகம் உதிக்கின்றது," என்று அவனை விலக்கி, ஓட்டிய வண்டியை உடனே நிறுத்த முயன்றான்.

சந்தனகன்; "நான் சோதனைசெய்த வண்டியை நீ மறுபடியும் சோதனை செய்வேன், என்று எங்ஙனம் கூறுவாய்! இது என்னை அவமானப் படுத்தியதாகும். ஆகையால் இதற்கு நீ சரியான உத்தரவு அளிக்கா விடில், உன்னை வாளா விடேன்," எனக் கறுவி வாளை உருவினன். உருவின வாளைச் சந்தனகன் வண்டிக் காரனிடம் கொடுத்து, "இதனை அனுமதிச் சீட்டாக வைத்துக்கொள்! காவலர் எவரேனும் சோதனை செய்யவரின், சந்தனகன் சோதனை செய்த வண்டி



4026,

இது, என்று சொல்லி அதற்கடையாளமாக இவ்வுடைவாளையும் அளித்தானெனக் கூறிக் காட்டுக! அவர் வழிவிலகுவர்,'' என்று கூறி வழிவிட்டனன்.

பின்னர் வீரகனும் சந்தனகனும் தம்முட் சண்டையிட்டுத் தெருவில் கட்டிப் புரண்டனர். சந்தனகன் அவ் வீரகனை நையப் புடைத்துத் துரத்தவே, அவன் அரசனிடம் ஓடி முறையிட்டான். இதற்குள் வண்டியும் நகரின் எல்லை கடந்தது. அப்போதும் உள்ளிருப்பவர் இன்னாரென வண்டிக்காரன் அறிந்திலன். வழிமேல் விழிவைத்து வசந்த சேனையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்ற சாருதத்தனுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாக இருந்தது. இதுவரையில் வண்டி வராததற்குக் காரணம் யாதாயிருக்குமெனத் தன் நண்பனுடன் கலந்து பல்வேறு விதமாக அவன் யோசனை செய்திருந்தனன்.

கொட்டாது பூத்து நின்ற கண்களுக்கு எதிரே ஒரு மூடு வண்டி வரக் கண்டதும், சாருதத்தன் சற்றே மனந் தெளிந்து வண்டியின் திரையை நீக்கி நோக்கினன். உள்ளே ஆரியகனைக் கண்டதும் அவனுக்கு அதிசயம் பிறந்தது. ஆரியகனோ அபயம் அபயம் என்று கையெடுத்துக் கும்பிட்டனன். ஆதலின், "இவ்வண்டியுடன் வேண்டிய இடம் போய்ச்சேருக" என்றிசைத்து விலங்கின் சின்னங்களையும் வெட்டியெறிந்தான் சாருதத்தன். மறு நிமிஷம், வசந்த சேனையின் ஞாபகம்வர, ''அவளுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது. அன்றி அவள் ஒரு கணமும் இங்கு வரத் தவறாள். இனி என் செய்வது'' என்று ஒன்றும் தோன்றாதவனாய் அங்குமிங்கும் அவன் ஓடினான்; மைத்திரேயனை அருகழைத்து, "நண்ப! நீ சென்று

என் வசந்த சேனையைத் தேடிவா! அவளுக்கு யாது நேர்ந்ததோ? அவளைக் காணுமல் நான் வீடு திரும் பேன்!'' என்று அவ்விடமே நின்ருன்.

அவ்வசந்தசேனை ஏறிச்சென்ற மூடுவண்டியோ நிதானமாகச் சகாரனது தோட்டத்தைச் சேர்ந்தது. சகாரன் அச் சமயம் பூங்காவிலே நீராடிக்கொண் டிருந்த பௌத்த சந்நியாசி ஒருவனைப் பிடித்திழுத்து வந்து, அவரைத் தொந்தரைசெய்து அந்த ஆண்டி படுந் துயர் கண்டுகளித்துப் பொழுது போக்கினுன். அதற் குள், தாமதமாய் வந்த வண்டியும் வந்து நிற்க, சகாரன் அவ் வண்டிக்காரன்மீது தன் கோப மனைத்தையும் காட்டிநின்றனன்.

சந்நியாசியின் சாந்தமான குரலையும் சகாரனது கடூரமான தொண்டையையும் கேள்வியுற்ற வஸந்த சேனை வண்டியி லிருந்தவண்ணம் உயிரொடுங்கினள். "ஒருயிர்க்கும் தீங்கு நினையாத பௌத்தமதத் துறவி யையே துன்புறுத்திய அக் கொடியோன் என்னைக் கண்டதும், புலிபோல் பாய்ந்து பிடிப்பானே! நெடு நாளாகக் கறுவி நின்றவனது கையில் வலுவில் வந்து அகப்பட்டுக்கொள்ளவும் விதியோ? வண்டி மாருட் டத்தால் இச்சண்டி கையில் மீள்வும் சிக்க நேர்ந்தது. இதினின்றும் தப்புவ தெப்படி? இக் கொடும்பாவி நம்மைச் சும்மாவிடான். நாம் உயிரை இழக்க நேரும். சாருதத்தர் நம்மை நோக்கி ஏங்கி நிற்பாரே! என் செய்வது! தெய்வமே! உனக்குக் கருணையில்லையா?" என்று நினைத்து ஏக்கங்கொண்டனள்.

சகாரன் விரைந்துவந்து, வண்டியின் திரையைத் தீண்டலும், கருடனைக் கண்ட அரவம்போல் மூச் சடங்கிப் புலிவாயில் சிக்கிய புல்வாய்போல் பொறி

கலங்கினள் அப்பாவை நல்லாள். சகாரனே அவளைக் கண்டதும், ஆவேசம் வந்தவனைப்போல் கண் சிவக்கப் பல் நெறித்துக் கைபிடித்து அவளை வெளியிலிழுத்தான்; பின்பு, "முன்னம் ஏமாற்றி ஓடின உன்னை இனி உயிருடன் விடுவதில்லை. எனக்கு உதவாத பொருள் இவ்வுலகில் இருந்தென்ன பயன்?" என்று சினந்து பேசித் தன் அருகிலிருந்த காவலன் சேடனைக் கூவியழைத்தான்.

பெண்ணென்றால் பேயும் இரங்கு மென்பதையொப்ப, அவ்வனிதையின் மதிவதனங் கண்ட சேடனுக்குக் கருணை ததும்பியது. அப் பதிவிரதையைப் பிடரிகொண்டு ஈர்த்துத் தள்ளிச்சென்ற சகாரனைக் கண்டு, கடுங்கோபங்கொண்ட சேடன், அக் கொடியனது தோள்வலிக்குப் பயந்து, தூரத்தில் நின்றுகொண்டே, "அடே மூடாத்மா! பிற மாதரைப் பிடரிகொண்டு தள்ளும் பெரும் பேயே! வசந்தசேனை விலைமகள் அல்லள். குலமகளிர்க்கும் திலகம் போல்வாள்! இம் மாதைக் கொலைசெய்யத் துணிந்து என்னைத் தூண்டுகின்றாய். இப் பழிக்கு நான் உடன்படேன். இக் கொலைபாவம் உன்னையேயன்றி உன் குலமனைத்தையும் சுட்டெரிக்கும். மதியிழந்து மாபாவம் புரியும் நீ கொடுநரகில் விழுந்து மடிவாய். வாலி மடிந்ததையும் வல்லரக்கர் பட்டதையும் கோலமுடி மன்னர் குறைந்ததையும் எண்ணிப்பார். சாருதத்தன் தேவியைத் தீண்டிய உனது கரம் இன்னும் ஒடிந்து விழவில்லையே" என்று விளம்பி ஓடலானான்.

சகாரன் அவனைப் பின்தொடர்ந்து இழுத்துவந்து, கைகால்களைக் கட்டி வண்டியில் உருட்டிப் போட்டு, மரத்தின் மறைவில் சென்று பயந்து பதுங்கி நின்ற

வசந்த சேனையின் குரல்வளையைப் பிடித்து நெறித்து விட்டான். வாய்விட்டுக் கதறவு மியலாது கண்களி ரண்டும் பரக்க விழித்து, மேல்நோக்கும் வண்ணம் அடியற்ற மரம்போல் தளர்ந்து தரையில் சாய்ந்தாள் வசந்தசேனை.

தரையில் விழுந்த தன்மைகண்டு அந் நல்லாள் இறந்தனளெனக் கொண்ட சகாரன் ஆங்கிருந்த சருகுகளைத் திரட்டி, அவள்மேலே தூவி மறைத்து விட்டு, அவ் வண்டியி லேறிக்கொண்டு சேடனுடன் மாளிகை சேர்ந்தான். சேர்ந்ததும் அச் சேடனை அங்கே ஓர் அறைதனில் தள்ளி, சங்கிலிகளால் பிணித்துத் தூணிற் சேர்த்துக் கட்டிப் போட்டனன். தான் செய்த கொலைக்குச் சாட்சியாக இருக்கும் சேடனை ஒருவரு மறியாவண்ணம் மறைத்துவிட்டதால், இனி சாருதத் தன்மீது பழி சுமத்தலாமென அச் சகாரன் மனக்கோட் டை கட்டலானான். இச்சக மாக்களிற் சிலரும் அச் சூழ்ச்சிக்கு உடந்தையாக நின்றனர்.

## 11. குற்றப் பத்திரிகை

**உச்சயினி நகரில் இதுகாறும் இணையிலா விருதுடன் வாழ்ந்து** வந்த வசந்த சேனை சாருதத்த வேதியனால் கொலையுண்டனள் எனும் செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரந்தது. சமஸ்தானிகப் பதவி வகிக்கும் சகா ரன் வெகு துணிவுடன் நீதிபதியை நண்ணி, அந்நான் மறையாளன்மீது பழிசுமத்திக் குற்றம் சாட்டினன். அன்று நீதிஸ்தலத்தில் விசாரணையைக் காணவந்து குவிந்த ஜனத்திரள் கணக்கிட முடியாது. வந்தவ ரனைவரும் அப் பெரும்பழிகேட்டு "ஆ! ஆ!" என் றதிசயித்தனர்.

"ஒன்று மறியாத அப் பாலிகையைக் கொன்று குவித்த கொடியவன் எவனோ!" என்பர் சிலர். "இத் தகைய கொடியனை ஒரு கணமும் உலகினில் உயி ருடன் வைத்தல் தகாது" என்று கடிந்து பேசுவர் சிலர். "சாருதத்தன் வெளித்தோற்றத்தில் கள்ள மற்ற உள்ளத்தனாகக் காணப்படினும், இத்தகைய கொடுமைக்கு ஈடாகக் கழுமரத்தையே அவன் கட்டித் தழுவவேண்டும்" என்று சகாரனைச் சார்ந்தோர் பல ரும் கூறுநின்றனர்.

"பசி வந்திடின் பத்தும் பறக்கும் என்பது பொய் யாமோ? கால வசத்தால் சாருதத்தன் அக் கொடுந் தொழிலும் செய்திருக்கக்கூடும்" என்றார் சிலர். கபட மற்ற பலர், "சாருதத்தன் ஒருக்காலும் உயிர்க் கொலை புரியான். இது திண்ணம். அந் நல்லோன் இருப்பதனால்தான் மாதம் மும்மாரி பொழிகின்றது. இன்றேல் மாளவநாடு பாலகனது கொடுங்கோன்மை பொறுது, அன்றே மண்மாரி கொண்டு மடிந்திருக் கும்!" என்று இரக்கங்கொண்டு கூறினர்.

"ஆனமுதலில் அதிகம் செலவழித்து, நாளடை வில் கடனாளியாகிப் படிப்படியாக நடத்தை கெட் டான் சாருதத்தன். முதலில் கணிகையின் நகை களை அவன் களவாடினன். பின்னர் நாரியையே கொலை செய்யத் துணிந்தான். பணத்தாசை யாரை விட்டகன்றது?" என்று இச்சகம் பேசும் மாக்கள் சாதிக்க லாயினர். நல் லெண்ணங் கொண்டவரும் அது கேட்டுச் சிறிது சிந்தை மயங்கி, அக்கூற்றில் உண்மை யிருக்குமோ என்று ஐயுற்றனர்.

சிலர் "நாம் இக்காலம், ஒருவரையும் மேற்பார் வையில் நம்பி நிச்சயித்து விடமுடியாது. நறுமணங்

கமழ் தாழையில், நஞ்சுண்ட நாகம் கரந்துறைதல் இயற்கைதானே!" என்றனர். வேறு சிலர், "சாருதத்தன் பெயரைச் சொன்னாலும் பாவம் போம். அவனைக் கண்டதும் கலி நீங்கும். அவ்வுத்தமன் பெயரை உரைத்த வளவில், சித்தம் இரங்காதார் இரார். காணாது ஒருவன்மீது பழி சுமத்துவது ஒருவருக்கும் ஒண்ணாது. ஈ எறும்பு முதலான மன்னுயிரையும் தன்னுயிரேபோல் நோக்கும் கருணைக் கடலை, தயாளசம்பத்தை, நாம் பழித்தால் நமது நா அழிவுறும்," என்று சாருதத்தனைப் புகழ்ந்து பேசினர்.

"இக்கொடியனான சகாரனே ஏன் அச்சதிகாரனாயிருத்தல் கூடாது? தானே செய்துவிட்டு அப்பழியை, அவன் இக் குணவான்மீது சுமத்தி யிருக்கக் கூடும்," எனப் பலர் கருதினும், அதனை உரத்துக் கூறவும் பயந்து, தம் காதுடன் ஓதிக் கொண்டனர்.

இங்ஙனம் பலர் பல்வேறு விதமாகக்கூறி நிற்கையில், சிப்பாய்கள் இருவர் சாருதத்தனைக் கைவிலங்குடன் கொண்டுவந்து சபை நடுவே நிறுத்தினர். ஒரு பாவமு மறியாத அப் பரமபுருஷன், நீதிபதியை நோக்கித் தன்னை இந் நிலையில் கொண்டுவந்து நிறுத்தியதன் காரணத்தை வினவவே, சகாரனைச் சார்ந்தோரில் சிலர் அவனைப் பரிகசித்தனர். சிலர்; "இவன் பெருங் கள்ளனாயிருத்தல் வேண்டும்; இவன் செய்தி ஊரெல்லாம் சிரிக்க, இவன் ஒன்று மறியான் போல் கூறுகின்றான்," என்று இறந்த வசந்தசேனையின்பால் தமக்குப் பேரன்பு இருப்பதுபோல் இரக்கத்தைக் காட்டினர். கொலை பாதகனைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து நிறுத்திய உயர்வீரனைப்போல் சகாரன் கனைத்து, மீசையை முறுக்கித் தன் ஆதனத்தருகில் எழுந்து

நின்றான். அது கண்ட அவன் தோழர், "ஆ! இவனல்லவோ சூரன்! இது காறும் நம்மை ஏமாற்றி வந்த இவ் வேதியனது வேஷத்தை வெட்ட வெளியாக்கிய வேந்தனிவனன்றோ! ஏந்தலென்றால் இவனுக்கே தகும்! நிற்கும் நேர்த்தியைப் பாருங்கள்!" என்று கூறினர்.

**சகாரன்:**—நீதிபதி! இப்போது தங்கள் முன்னிற்கும் இம் மனிதப் பதராவான், அந்தணர் பதிதன், செய்ந்நன்றி கெட்டவன்! ராஜத்துரோகி!

**நீதிபதி:**—சகாரரே! உமது அபிப்பிராயம் இங்கு வேண்டுவதில்லை. நீர் கொணர்ந்த பிராதைக் கூறும்.

**சகாரன்:**—இவ் வந்தணன் தன்னை நம்பிய மாதின் நகைகளைக் களவாடியதோடு நில்லாது, அவளையும் கொன்று குவித்தவன்.

**நீதிபதி:**—அதற்குத் தக்க சாட்சிகளுண்டா?

**சகாரன்:**—எண்ணிக்கை யற்றது. முக்கியமாகத் தையலின் நகைகளை வைத்து விளையாடின அவனது குழந்தையும், அதைப் பார்த்து நின்ற தாதியுமே சாலும். அவனது பணியாளன் மைத்திரேயன் அவனுக்கு உளவா யிருந்தவன். செல்வம் மிகப் படைத்திருந்த காலத்து இவன், அளவு கடந்து, பொருளை வாரி இறைத்து, நற்பெயர் வாங்கினான். அதனால் பின்பு நாம் எத்தகைய அநியாயம் புரியினும், இப் பாமர மக்கள் எளிதில் நம்பமாட்டார்கள் என்று கள்ள எண்ணங்கொண்டான்.

"இவனை வள்ளலெனக் கூறுகின்றனர் சிலர். இவனது வள்ளன்மையை வியந்துபேசும் மனிதர் உண்மையை உணராதாரே யாவர். இன்று வசந்தசேனையைக் கொன்றதுபோல் இதற்கு முன்னம் எத்துணை

பெயரை இவன் கொன்றனனே? அதனை ஆண்டவ னொருவனே அறிதல் கூடும். ஆடு தோல் போர்த்த கோனாய் போல், இவ் வஞ்சகன் வசந்த சேனையைக் கொலை புரியச் சமயம் பார்த்து நின்றான். இவன்பால் வைத்த ஆசைக் கயிற்றால் ஆடிய பம்பரம்போன்றாள் அப்பாவை. ஆதலின் அவன் சென்ற இடமெல்லாம் அப் பேதை தொடர்ந்தனள். அவளுக்கு வண்டியனுப்பி நகர்ப்புறச் சோலைக்குத் தனியே வரவழைத்து, ஒரு வருமில்லாதபோது, தன் எண்ணத்தை இவன் நிறை வேற்றினன். இவன் கொண்ட எண்ணம் நன்றே எனின், ஏன் அவளை வேறிடத்திற்கு வரவழைத்திருத் தல் கூடாது? வசந்த சேனையின் பரந்த மாளிகையில் லையா? அஃது ஒரு சேனை முழுதும் தங்க இடம் கொடுக்குமே.

"புதர் நிறைந்த பாழுஞ் சோலைக்கு, அதிலும் நகர எல்லைக்கு வெளியில், மனித சஞ்சாரமற்ற இடத்தில், தனியாகத் தருவித்துத் தன் ஏழ்மை வாழ்வைப் போக் கிக்கொள்ள வேறு வழியின்றிக் களவு வழி கற்றான். தானே தன் வீட்டில் கன்னம் வைத்துவிட்டுப் பிழை யைப் பிறர்மீது ஏற்றிப் பலரையும் ஏமாற்றி விட் டான். இல்லாவிடில், அன்று சாருதத்தன் வீட்டில் கன்னம் வைத்தவன் யாவன்? நமது கொற்றவனது பரிபாலனத்தில் கன்னக்களவுகள் நடக்க இயலுமோ? குற்றவாளியே பிராதியானால் நிரபராதியன்றோ தண் டனை அடைவான்!

(இங்குச் சகாரனுக்குப் பேச நாவெழவில்லை. தன் னெஞ்சே தன்னைச் சுடுமன்றோ? இவனுக்கே முற்றிலும் பொருத்தமென்பதை அவன் நெஞ்சம் அறியும். ஆனால் குரூரத் தன்மையோ இவனைத்

தட்டிக் கொடுத்து சபாஷ்! சகாரனே! மேலே துணிந்து சொல்லுக! என்று தூண்டிற்று)

"சூதுவாது அறியாத அப்பாவை இப்பாவியின் மனத்தை உள்ளவாறு உணர்ந்திருந்தால், அத்தகைய அன்பு பாராட்டியிராள். பாம்புக்குட்டியைக் கட்டி முத்தமிட்டது போல், இவனிடம் இணைபிரியா அன்றில்போல் அவள் வாழா நின்றனள். உறவாடிக் கெடுக்கவே இச் சாருதத்தன் உத்தேசித்தான். இவ்வறத்தோன் தன்னுயிர்போல் மன்னுயிரையும் குளிர்ந்த நோக்கத்துடன் காணும் அழகிய தன்மையாளன் என்று வெள்ளை மக்கள் வியந்து பேசலாம். வெளுத்ததெல்லாம் பாலென்றும், கறுத்ததெல்லாம் தண்ணீரென்றும் கருதிவிடுதல் அறிவுடைமை யாகாது. இவன் அசாத்தியன். இவனை நம்பவே கூடாது.

"தனக்கும் வசந்தசேனைக்கும் ஏற்பட்ட நட்பை இவன் படிப்படியாகப் பெருக்கி, முடிவிலோ தன்னைக் காணுது போனுல், உண்டி முதலானவற்றையும் வெறுக்குமாறு அவளை மயக்கிப், பொய்யன்பினுல் பிணித்துக் கட்டிவிட்டான். கொலைஞன் தனது பலி கடா, கொழுத்து வருவதைப்பார்த்து அகமகிழ்ந்திருந்தான். அவள் தன்னையன்றிப் பிறரெவரையும் மனத்தினும் நினைக்காதவள் என்பதையும் இவன் நன்கு அறிந்து கொண்டான். இவன் குலத்தையும் குணத்தையும் சிலர் சிறப்பித்துக் கூறுவர். அவை, சொல்லளவே யிருந்தால் யாது பயன்? செயலளவில் அவை பிரகாசிக்க வேண்டுமன்றோ?

"இவன் உண்மையில் நன்னடத்தை யுடையவனுயின், ஏன் எதையும் பகிரங்கமாகச் செய்தல் கூடாது? களவு வழியில் கணிகை யில்லம் நுழைவதும், கை

பொருளில்லாதபோது வைத்துப் போன பொருளை அபகரிப்பதும், நாதனற்ற நாரியைக் காதலால் மயக்கிக் கானகத்தே தனியாக வரவழைத்துக் கொலைபுரிவதுமாகிய அனைத்தும் பணப்பேய் பிடித்தாட்டும் கூத்தேயாம். பசுவைச் சாது என்று நம்பி, அதனை அணுகலாகாது. அது பின்னங்காலால் உதைப்பதும் உண்டு; திடீரென்று பாய்ந்து குத்திக் கொல்லும் இயல்புமுடையதாம். ஆதலால் இச்சாருதத்தன் சாத்வீகனென்றும், தர்மிஷ்டனென்றும் நம்பினுள் அச் சின்னஞ்சிறு பாலிகை. அவள் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் இக் குப்பையில் அர்ப்பணஞ் செய்தாள் அதற்கு என்ன கைம்மாறு பார்த்தீர்களா!

"இவனது உண்மைச் சரித்திரத்தை மறைத்து இவையனைத்தினுக்கும் உளவாயிருந்த மைத்திரேயன் ஏன் இங்கு வரவில்லை தெரியுமா! போலி சந்நியாசிகளையடுத்துப் பிடுங்கித் தின்னும் ஆஷாடபூதிகள்போல் எதற்கும் ஆமாம் என்று தலையாட்டும் அன்னக் குடுக்கைகளில் ஒருவனே யாவன் இவன் நண்பன் மைத்திரேயன். முதல் திருடன் பிடிபடவே, மற்றவன் தப்பியோடிவிட்டான். ஆதலால் வெளிமயக்கைக் கண்டும், பூர்வ சரிதத்தைக் கொண்டும், பிரமித்து விடாமல் மநுமுறைக்கேற்ப நியாயாதிபதிகள் தீர்ப்புக் கூறுவர்களென நம்புகிறேன்."

## 12. கழுமரம் குறுகல்

**சகாரன் கூறிய மாற்றம் கேட்டுக் கூரிய மதிபடைத்த நீதிபதி**யும், அறிவு வாய்ந்த பெருமக்களும் பிரமித்தனர். பாமரர் என்போரிலும் பலர் இடியேறுண்டநாகம்போல் கலங்கலாயினர், சகாரனே காரியசித்தி

காணப்போகும் களிப்பினில் மூழ்கிக் கிடந்தனன். மேலே நீதிபதி யாது செய்யப் போகிருரென அனைவரும் இமையாநாட்டம் பெற்றவர்போல் விழித்து நின்றனர். அவ்வேளை சாட்சிகள் எங்கே என்ருர் நீதிபதி. வஸந்தசேனையின் தாயான தள்ளாத கிழவியை அச்சகாரன் வரவழைத்து நீதிபதியின் முன்னே நிறுத்தினன். அவளோ தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட தொண்டுகிழவி, கண்ணொளி மழுங்கிக் காதும் கேளாத தன்மையள். அவளை நீதிபதி ஒன்று கேட்கச் சகாரனே மற்ருென்ருகத் திரித்துக் கூறியவளவில் அக் கிழவி எதற்கும் ஆம் ஆம் என்று தலையசைத்தனள். தன் செல்வியைத் தோற்ற காரணத்தால் அவள் புலம்பிப் புலம்பிப் புழுங்கி நின்ருள். அவள் வாக்கு மூலத்தால், சாருதத்தனுக்கும் வசந்தசேனைக்கும் தொன்றுதொட்டு அன்பு வளர்ந்து வந்ததென ஏற்பட்டது. இஃது சகாரன் கூற்றுக்கு ஓர் ஆதாரமாயிற்று. அன்று சாருதத்தனது வீட்டிற்குச் சென்றவள் மீளவில்லை என்றும் அவள் சொல்லினன்.

நீதிபதி:—சாருதத்தரே! அக்கிழவி சொன்னவையனைத்தும் உண்மைதானு? அன்ரு?

சாருதத்தர்:—ஆமாம், ஆனல்.........

நீதிபதி:—அதுவே போதும்.

சகாரன்:—நீதிபதி யவர்களே! குற்றவாளி தலையிறக்கங்கொண்டு நிற்பதிலிருந்தே எல்லாம் கண்டு கொள்ளலாம்.

சாருதத்தன் உண்மையில் "வசந்த சேனைக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ? யாரால் நேர்ந்ததோ?" என்று ஏக்கங்கொண்டு நின்றனனேயன்றி வேறில்லை. அப்போதும் கள்ளங் கபடற்ற அவன் உள்ளம் சகா

ரனைச் சந்தேகிக்கவில்லை. அவன் சொன்னதொன்றும் நீதிபதியின் காதில் நன்கு விழவில்லை, இதையே சமயமாகக் கொண்ட சகாரன், "உண்மை புலப்பட்டு விட்டதால், நீதிபதி யவர்கள் தக்க தீர்ப்பளிப்பாராக. ஆனால், இவன்மீது எனக்குக் கருணை பிறத்தலால் குற்றத்திற்குக் கழுமரத் தண்டனையைத் தவிர்த்து வேறெதாகிலும் தருதல் நலம்." என்று சத்தியவான் போல் செப்பினன்.

பொய்யுடை யொருவன் தன் சொல்வன்மையி னால் மெய்யெனத் தாபித்தான் என்பதை அப் பாமரரில் பலர் அறிந்திலர். மெய்யுடையொருவன் சொல்ல மாட்டாமையால் மெய்யும் பொய்யாக மாறியதை எங்ஙனம் அன்னார் அறிதலகூடும்? உண்மையை மறைத்துக் கூறின சகாரன் தனது வாக்கு வன்மையால், தான் பிடித்த பிடியைச் சாதித்தான். ஆனாலும் சாந்தமே வடிவெடுத்து வந்தாற்போல் நின்ற அந்தணன் வதனத்தைக் கண்டாரில் சிலர், மதிகலங்கினர்.

முடிவில் சாருதத்தன் மீது குற்றப் பத்திரிகை கூறிவிட்டனர். நீதிபதி தமது ஆசனத்திருந்த வண்ணம் சாருதத்தனை நோக்கி, "உமக்கு ஏதேனும் மறுக்கத் தக்க ஆதாரங்கள் உண்டேல், அவற்றை எடுத்துக் கூறுக. உமது உத்தரத்தைக் கேளாது யாம் தீர்ப்பளிக்க முற்படோம்," என்றார்.

**சாருதத்தன்:**—சொல்வன்மையால் மெய்யும் பொய்யும் மாறிக்கலந்த விருந்தளித்தான் சகாரன். என் மனமறிய நான் ஓர் அற்ப ஜீவனுக்கும் இன்றுவரை இன்னல் இழைத்ததே இல்லை. சகாரன் சொன்ன குற்றத்தைத் திருப்பிச் சொல்லவும் என் நா எழாததால், அதனை முழுமையும் யான் மறுக்கிறேன். அவன்

கையாண்ட முறைகளும் கண்டிக்கத் தக்கன. முதல் முதலாக என்னுயிரினும் இனிய எனது காதலிக்கு யானே இன்னல் இழைத்தேனெனக் கூறும் வன் கூற்று என் இதயத்தை அம்பெனத் துளைக்கின்றது,

"நான் நகைகளைக் களவாடியதாகக் கூறினுன் சகாரன், இதனை மறுத்தற்கு வசந்தசேனையே சாட்சி. அவள் இப்போழ்து இல்லாத காரணம்பற்றி யான் ஒன்றும் கூறுவதற்கில்லை. வசந்த சேனையே என்னிடம் அந் நகைகளை வைத்து விட்டுச் சென்றனள்.

(சகாரன் :—பார்த்தீர்களா! இறந்தவளைச் சாட்சிக்குக் கூப்பிடுகிருன். இதி லறியலாகும் இவனுண்மை! வசந்தசேனை தன் மாளிகையிலே நகைகளை வைக்க இடமில்லாமல், கதவுந் தாளுமில்லாத இவன் குடிசைக்கு அனுப்பிப் பத்திரம் பண்ணினதாகக் கூறுதல் விந்தையே!)

"நானே அந் நகைகளைக் களவாடினதாக என்மீது பழி சாற்றுவதற்கு ஆதாரம் ஏது? களவாடப் பெற்ற நகைக்குப் பதிலாக என் உயிர்த்தோழன் மூலம் என் மனைவியின் இரத்தினமாலையை வஸந்தசேனைக்குக் கொடுத்தனுப்பினேன்.

(சகாரன் :—ஆம்! அவன் உமக்கு சாக்ஷி. நீர் அவனுக்குச் சாக்ஷி) "அவன் இங்கு வராததற்குக் காரணம் அக் காரிகையைத் தேடிச் சென்றிருத்தல் வேண்டும். (சகாரன் :—அவள் மீளா மார்க்கம் போயினள். அவளை இவனும் பின்பற்றிச் சென்றிருப்பான்) அதனுல் தான் அவன் இதுவரை வரவில்லை. நான் அக் கொடுஞ் செயல் இழைத்தேனில்லை; என் நெஞ்சமே இதற்குக் கரியாகும், இராஜதண்டனைக்காக நான் பயப்படவில்லை. [சகாரன் :—

பார்த்தீர்களா, இவன் ராஜத்துரோகி! அரசனையும் அவமதிக்கிறுன்.] வசந்தசேனையைக் கண்டு வெகு நேரமாயிற்று. எனினும், யான் அவள் இறந்து விட்டனளென்பதை நம்ப முடியவில்லை. அவள் இன்னும் உயிருடன் இருப்பதாகவே என்தன் மனத்திற்குத் தோன்றுகிறது. உண்மையிலேயே வசந்தசேனை இறந்திருந்தால், யான் உயிருடனிருந்தும் இவ்வுடல் உலகுக்கு ஓர் பெருஞ்சுமையாகவே கருதுவேன்."

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோமென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்குமுளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு:

உடனே நீதிபதி தமது அருகேயிருந்த செட்டிமாரை நோக்கி, "நாம் நேரில் கேட்பதை நம்பவும் இடமில்லை. கேளாத வற்றையும் காணுதவற்றையும் நம்பித் தீர்மானிக்கவும் இடமுளது. ஆகையால் உண்மையை அறிந்து தீர்ப்புச் சொல்லுதல் கடமை. இல்லையேல் ஈசுவர கோபமும் உலக நிந்தையும் நமது தலையில் வீழ்தல் நிச்சயம். அனைத்தையும் நன்காராய்ந்து நுமது கருத்தை வெளியிடல் வேண்டும்" என்று கூறினுர்.

அப்போது மைத்திரேயன் ஓடிவந்து, நீதி மன்றத்தின் நடுவண் நின்ற கற்பகத் தருவைக் கண்டு கண்ணீர் உகுத்தான்; சகாரனை அங்கே கண்டவுடன் அவனைச் சுறுக்கென விழித்து நோக்கி, "இவை யாவும் இவ் வஞ்சகனுல் விளைந்திருத்தல் வேண்டும்" எனத் தீர்மானித்து, நீதி மன்றத்தில் நிற்பதையும் கவனியாது, சகாரனைத் தொலைத்துவிடுவதே சரி

என்று கோபத்துடன் அவனை நோக்கிச் சென்று கையையும் ஓங்கினன்.

விளையாட்டு வண்டிக்குப் பூட்டிச் சென்ற நகைகளை வசந்தசேனையிடம் திருப்பிக் கொடுக்கச் சென்ற மைத்திரேயன் அவளைக் காணாது மீளுங்கால், தன் நண்பனது கதியைக் கேள்வியுற்று நேரே நீதிமன்ற மடைந்ததால், அந்நகைமுடிப்பையும் தனது கரத்திடைக் கரந்திருந்தனன். சகாரனை யணுகிக் கையை ஓங்கியதும், அந்நகை முடிப்பு கீழே வீழ்ந்தது. உடனே சகாரன் குனிந்து அதனை எடுத்து நீதிபதியின் முன்னேவைத்து, "இதோ திருடன் நகையோடு அகப்பட்டுக் கொண்டான்," என்று கூறி அனைவரையும் மனங் கலங்கச் செய்தான். அவை வசந்த சேனையின் நகைகள் என்று ஏற்படவே, சகாரன் கூறிய அனைத்தும் உண்மையேயென அனைவரும் நம்பிவிட்டனர். ஓடும் வெள்ளத்தைத் தடுக்கக் கோலும் மணலணைபோல் முயன்ற மைத்திரேயன் முயற்சி யனைத்தும் பயனற்றுப் போயின.

**மைத்திரேயன்** :—சாருதத்தரே! ஈதென்ன அநியாயம்? யார் இதற்குக் காரணம்? ஏன் வாளாவிருக்கிறீர்? இவர்க ளனைவரையும் ஒரே தடவையில் முறியடித்துவிட எனக்குச் சக்தியுண்டு. உம்மையும் யான் மீட்பேன். இந்த அநியாய ராஜ்யத்திலே நீதிமுறையில் நின்றால் நமக்கு நியாயம் கிடைத்தலரிது. ஆரியகன் துணை நமக்குண்டு. அவன் பக்கம் வலுத்து வருகின்றது. இப்போது அவனிடம் உமது சம்மதம் பெற்றுச் சென்றால், செய்ந்நன்றி மறவாத அவ்வாரியகன் தன்னுயிரையும் தரக் காத்திருப்பான்.

**சாருதத்தன்** :—நண்ப! விதியின் பயனைப் பகுத்

தறியார் வீண் பிரயத்தனம் செய்வர். ஒருவனுக்கு ஆங்காலம் வரின் அவளே வருவாள் செல்வி. மற்றுப் போங்காலும் அவளோடு போகும் செல்வம். ஆம் போது நம்மைக்கண்டு வரவில்லை. அதுபோல் என் உயிரேயனைய வசந்த சேனை போயினபின், யான் உயிருடன் இருத்தலில் யாது பயன்? எனது கால பலம் சரியாக இல்லை. யாவும் எனக்கு எதிரிடையாக மாறுகின்றன. அதனைத் தடுக்க முயல்வது அறியாமை, எல்லாம் ஈசன் செயல் என்பதை மறந்தாயா சொல்.

**நீதிபதி**:—சாருதத்தரே! இனி என்னால் ஆவதொன் றில்லை. என்னைப் பற்றிய மட்டில் நீர் நிரபராதியெனத் தோன்றினும், யான் அங்ஙனம் கூறச் சக்தியற்றவ னாகிறேன். ஏனெனில் செட்டிகள் தீர்மானத்தின் வழி நிற்கவேண்டி வருகிறது. காவலனது கருத்துக் கிணங்க யான் ஒருப்பட்டுள்ளேன். அரசன் ஒருகால் உம்மை மன்னித்தலும் கூடும்" என்பதற்குள், "சாரு தத்தனைக் கழுவி லேற்றுக. அரசன் ஆணை இது" என்று எழுதியிருந்த ஓலையொன்றைப் பாலகனிட மிருந்து கொண்டுவந்ததாக ஒரு சேவகன் நீதிபதி யிடம் கொடுத்தனன். "எந்த நகைகளுக்காக இக் கொலை நேரிட்டதோ அந் நகைகளைச் சாருதத்தனது கழுத்தில் மாட்டி, வீதி வழியே அவனை நடத்தி, இத னைப் பறையறைவித்து முடிவில் அவனைக் கழுவிலேற் றுக," என நீதிபதி கொலையாளருக்கு உத்தரவிட்டார்.

இதை யறிந்து அனைவரும் கதி கலங்க, மைத்தி ரேயனும் மதிகுலைந்தான். சாருதத்தனோ சிறிதும் மனந்தளராது, மணக்கோலம் பூண்டு செல்லும் மரு கனைப்போல் கம்பீரமாக நிமிர்ந்து சென்றனன். ஆனால் அவனது முகவாட்டம் மனத்திலுள்ளதைக்

கண்ணாடிபோல் காட்டியது. அவன் நண்பன் மைத்திரேயனை யழைத்து, "மைந்தனைக் கொணர்க! கடைசியாக யான் ஒருமுறை அவனைக் கண்குளிரக் கண்டு கொள்ளுகிறேன். நண்ப! எதனை நினைந்தும் நீ வருந்தவேண்டாம். ஒருவனுக்கு வாழ்வும் தாழ்வும் சுகமும் துக்கமும் மாறிமாறி வந்துகொண்டே இருக்குமாதலால் வீணே நைந்தழிதல் மடமையாம். அனைத்தையும் ஒரு சீராக நினைத்து உண்மை கடைப்பிடித்து உயர்நிலையில் நின்றால், விதியையும் வெல்லலாம். செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் நாம் இரு நிதியம் எய்துவமோ? பழவினையின் பயனை அனைவரும் அனுபவித்தே தீரவேண்டும். ஆதலால் நீ விசனத்தை ஒழி. எல்லாமறிந்த உனக்கு யான் அதிகம் சொல்லத் தேவையில்லை. வருந்தவேண்டாம்" என்று கண்ணைத்துடைத்து, ஆறுதல் கூறியனுப்பினன்.

## 13. சாக்கோல ஊர்வலம்

**சாக்கோலத்திற்குரிய சின்னங்கள் யாவும் சாருதத்தன் பூணப்** பெற்றான். அந்த அந்தணன் உடலின் மீது ஏவலாளர் சிவந்த சந்தனம் பூசினர்; கழுத்தில் செவ்வரளி மாலை யணிந்தனர்; கழுமரத்தை அவன் தோளின்மீது வைத்துச் சண்டாளர் இருவர் வீதி வழியே சாருதத்தனை இழுத்துச் சென்றனர். "அந்தோ! உடுக்கள் உதிர்வதையும், நல்லோர் நலியுறுவதையும் காணின் பாவமாம்," என்பர் பெரியோர். ஆதலின் சாருதத்தன் தெருவழியே சாக்கோலத்துடன் செல்வதை நோக்கக் கூடாதென்று கருதிய பலரும் தம் வாயில் கதவுகளை அறைந்து தாளிட்டு வீட்டினுள்ளே சென்றனர்.

“வியாபாரி விநயதத்தரின் பேரன்! சகர தத்தரின் புதல்வன்; சாருதத்தன் எனப் பெயரோன், பணப்பேயால் பீடிக்கப் பெற்றான்; பெண்பாவையைக் கொன்றான்; அவனைக் கழுவிலேற்றக் காவலன் ஆணை தந்துள்ளான். நகர மக்களே! ஜாக்கிரதை!” என்று கூறித் ‘தகும்!’ ‘தகாது’ எனத் தமுக்குத் தட்டிக் கொண்டே அச் சண்டாளர் சென்றனர் தெரு முழுதும். இம் மானக்கேட்டால் சாருதத்தன் பாதியுயிர் இழந்தனன் என்றே கூறலாம். வசந்தசேனை இறந்தனள் என்றபோதே அம் மறையவனது பாதி உயிர் போயினது. ஆதலின் கொலைக் களம் நோக்கி வீதிவழியே செல்லுங் காலையில், அச் சீரிய சாருதத்தனது உடல் மட்டுமே சென்றதெனச் சாற்றல் வேண்டும். சகாரனது சதியின் விளைவாக இக்கதியடைந்த அக்காராளன் கொஞ்சமும் இறப்பதற்கு அஞ்சவில்லை. “விதி வலிதாயின் யான் என்ன செய்வது” என்றே அத் தீதிலான் தேர்ந்து தெளிவு கொண்டு துலங்கினன்.

இனி உரோகசேனனை அழைத்துவரப் போன தோழன் மைத்திரேயன் குழந்தையுடன் அங்கே குறுகினன். கன்றைக் கண்ட தாய்போல் அக்கருணை வள்ளல் தாவியோடித் தன் குமரனை எடுத்துக் கட்டி முத்தங் கொடுத்துத் தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தனன். கழுத்தைக் கட்டிக்கொண்டு கீழிறங்க மறுத்த சிறுவனே, “அப்பா! எங்குச் செல்லுகின்றாய்? ஈதென்ன கோலம்! நமது மாளிகைக்குப் போகலாம் வாரும். இவர்கள் யார்? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே,” என்று தந்தையின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு கதறினன்.

வேதியன் தனது அரும்பாலகனை நோக்கி, "என் கண்ணே! கண்ணின் மணியே! கரு மாணிக்கமே! என தன்பே! என் ஆருயிரே! உன்னை எங்ஙனம் விட்டுப் பிரிவேன்? (உள்ளங்கையை விரித்து முத்தமிட்டு) எள் ளும் நீரும் இறைக்கும் கர்மம் சிறு போழ்திலேயே இக்கைக்குக் கிட்டியது போலும்" என்று பலவாறு கூறிப் பார்ப்போர் அனைவரும் பேதுறும் வண்ணம் புலம்பினன். அதுகண்டு ஆற்றாத அரிய நண்பன்மைத் திரேயனோ ஓட்டை மனத்தனாய் உளுத்த மரம்போல் நின்றான். முடிவில் பாலனைத் தன் நண்பனிடம் பரிந் தளித்து அத் தெருவழியே போமளவும், பின் நோக் கியே சென்றனன் அத்தருமனே யனையான்.

பறையறைவிப்போர் முரசறைந்து கொண்டே சகாரன் வசிக்கும் வீதியில் திரும்பினர். அவ்வீட்டு வாயிலை நெருங்கியதும், ஆங்கே ஓர் இருட்டறையில் இரும்புச் சங்கிலிகொண்டு கற்றூணில் பிணிக்கப்பட் டிருந்த சேடனது செவியில் பறையோசை பேரிடி போல் விழலாயிற்று.

உடனே அச் சேடன் தனது காது நெறித்து உற் றுக்கேட்டு, "என்ன அநியாயம் இது !! தெய்வ மும் இது கண்டு பொறுக்குமோ ? சாருதத்தனைக் கழுவேற்றுவதா! இக் கொடுமையை மனத்தாலும் நினைத்தல் கூடுமோ ? தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன், அந்தோ! இவ்வந்தகர்பால் அகப்பட்டு, அவதி யுறுகின்றனனே! இனி இதனைக் கேட்கும் யான் உயிர் வைத்திருத்தல் இழிவு! இதற்குக் காரண னுன அக்கொடியவனைக் கழுவிலேற்றி இவ்வள்ளலைக் காத்தல் வேண்டும்," என்று திமிர்ந்து, சங்கிலியை முறித்துக் கொண்டு ஓரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து ஜன்னல் வழியே நுழைந்து தெரு வீதியில் தொப்

பெனக் குதித்து நின்றான். உடனே அனைவரும் சேடனைக் கண்டு வியந்து திகைத்து வழி விலகினர். சேடனோ சாருதத்தனது அருகில் சென்று, ஆங்கிருந் தோரைத் தூரத்தள்ளி "நகரப் பெரியாரே! கேண்மின்! விழுமிய குலமும்குணமும் கொண்ட இவ்வேதியனைக் கழுவிலேற்றல் ஆண்டவனுக்கும் அடுக்காது. உண்மையில் கொலைபுரிந்த பாதகன் சகாரனேயாவன். நீதிபதியின் கண்ணில் மண்ணைத் தூவி, நிரபராதியைக் கழுமரத்துக்கு அனுப்பிய சகாரனைப் பிடித்துச் சித்திரவதை செய்தல் வேண்டும். கற்பகத் தருவை வெட்டிச் சாய்த்தல்போல், சாருதத்த வள்ளலை, இந்நிரபராதியை! உயிர் வாங்குவதோ? பாலகனது பரிபாலனத்தில் நடக்கும் அநீதியைப் பாருங்கள்.

"பூமிதேவி இனிமேல் பொறுத்திராள். சாருதத்தனுக்கு இம்மியளவேனும் தீமை நேரின், அது இம் மாநகரின் பெருமைக்குக் குறைவாகும்; நமது மானிடவர்க்கத்திற்கும் இழிவுண்டுபண்ணும். உத்தமர் வயிற்றுதித்த உச்சயினி வாசிகள் இதனைக்கண்டு பொறுப்பரோ? படாப்பழி சுமத்திய சகாரனே கொலைஞன். கொலையை நேரில் கண்டு அதனைத் தடுக்கவகையில்லாமல் நின்ற என்னையும் அவன் விலங்கிட்டுத் தன் மாளிகையிலே காவலில் வைத்தனன். சாருதத்தனுக்குத் தீமை என்று கேள்வியுற்றதும், அத்தளைகளுடன் குதித்து வந்தேன் பாருங்கள்!'' என்று நான்கு திசையும் சுற்றிச் சுற்றி இரைந்து கதறினன்.

மாளிகையின் மீதிருந்து அனைத்தையும் கூர்ந்து நோக்கிநின்ற சகாரன் உண்மை புலப்பட்டு விடுமென்றஞ்சி ஓடோடி வந்து, "திருடிய கள்வன் சாகசமே சாகசம்'' என்று கூறி அச் சேடனைப்பிடித்து நையப்

புடைத்து இழுத்துக்கொண்டு போயினன். போகுங்கால், சண்டாளரை விளித்து, "நீவிர் உமது கடமையைச் செலுத்துங்கள், அரசன் ஆணை இது. கணப்பொழுதும் தாமதம் வேண்டாம்" என்று உத்தர விட்டனன் அக் கொடியோன்.

ஏழை சொல் அம்பல மேருது, என்பது மெய்யே எனினும் சேடனுரை கண்டு திகைத்த மக்கள் பலரும் சகாரனைக் கண்டு வெருவி வாய்மூடி நின்றனர். சின்னேரத்துக்கெல்லாம் சாருதத்தன் சண்டாளருடன் கொலைக் களம் குறுகினன். இதற்குள் சேடனைத் தூணில் பிணித்துக்கட்டி ஆத்திர மடங்கும் வரையில் புடைத்துவிட்டு, வேடிக்கை பார்ப்பதற்காக அச் சகாரனும் நன்காடு நண்ணினன். கழுவிலேற்றும் சமயம் நெருங்க, அச் சாருதத்தனை மேடைமீது கொண்டு நிறுத்தினர் அச்சண்டாளர். அவ்வேளை ஆங்கிருந்தார் அனைவரும் கேட்கும்வண்ணம் உரத்துக் கூறுவான் சாருதத்தன் ;—

"அறிவிற் பெரியோரே! அந்தணரே! என் தாய்மாரே! யான் இதுவரை இந் நகரில் ஒருவனுயிருந்து வந்தேன். இனி யான் உமது ஆசிபெற்று விண்ணுலகம் அடையப் போகின்றேன். அதற்காக உமக்கு என் மனமார்ந்த வந்தனம். மறு கணத்தில் யான் மரிக்கப் போவதால், யான் உங்களிடம் பொய்சொல்லிப் பயனடையப்போவது ஒன்றுமில்லை. வாய்மை வழிநிற்பதே எனது கடமை; அதன் பலன் ஆண்டவனுக்கே அர்ப்பணம். ஒழுக்கமே விழுப்பம் தரும் ஆதலின் அவ் வொழுக்கத்தையே உயிரினும் ஓம்பிவந்தேன். என் மனமறிய யான் இந்நேரம் வரையில் அடாத தொன்றும் செய்தேனில்லை, களங்க மற்ற

உள்ளமே எனது கவசம். அதனைப் பிளக்க வஞ்சகரது கோடரிகள் சிறிதும் பயன்படா! தர்மம் என்பது ஒன்றுண்டாகில், அதனை யான் கடைப்பிடித்து நடந்ததும் உண்மையே யாயின், அஃது என் குணத்தைக் காக்கும், பழிச்சொல்லைப் போக்கும்: பாமரரின் உள்ளத்தைத் துலக்கும்," என்று கூறிக் கொலைஞரை நோக்கி, "இனி உங்கள் கடமையைச் செவ்வனே நடத்துங்கள்," என்றான். தன்னை இகழ்வாரையும் அணைத்து ஆதரிக்கும் ஏந்தலை அச் சண்டாளர் கழுவிலேற்ற ஆயத்தமாயினர்.

## 14. தர்மம் தலைகாக்கும்

அவ்வேளை கோவென்றலறி அடித்துக்கொண்டு மாதொருத்தி கழுமரம் நோக்கி ஓடி வந்தனள். அவளைத் தொடர்ந்து பௌத்த மதத் துறவி யொருவரும் விரைந்துவந்தார். மாதின் வருகை கண்டதும், "ஈதென்ன வனதேவதையோ! இன்றேல், தர்மமே வடிவெடுத்து வந்துளதோ? யாதோ அறிகிலோம். தலைவிரி கோலத்துடன் வருவதை நோக்கின், கதி கலங்குகின்றதே," என்று சகாரன் உள்ளிட்ட அனைவரும் திடுக்கிட்டு நின்றனர்.

அப் பெண்பாவை கழுமர மேடைமீது கூசாமல் ஏறிநின்று பெருமூச்சு விட்டுக்கொண்டு, "பொறுங்கள்! அறத்தைக் கொலைபுரியவேண்டாம்; அவனியே அழிந்துபோம்," என்று கையமர்த்திச் சைகை செய்தனள். பின்பு, "என்னை இவர் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. யான் இதோ உயிருடன் உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன்! ஆதலால் இவரை இப்பொழுதே தளையவிழ்த்து விட்டு விடுக! ஈச! பண்ட

மோரிடம் பழியோரிடம் என்பது இப் பாலகனது ஆட்சியில் உண்மையானதே,'' என்று கூறிச் சாருதத் தனது அரவிந்தத் தாளிணையில் அடியற்ற மரம்போல், முடிசாய்ந்து வீழ்ந்தாள்; அதுகண்டு ஆங்கு நின்றிருந் தார் அனைவரும் அறிவழிந்து ஆவி யொடுங்கினர்.

"ஆ! ஆ! தெய்வம் தலைகாக்கும்; தர்மம் தவறாது என்று இப்பூசுரன் கூறியது இன்னும் நமது செவியை விட்டகலவில்லை. இதற்கு முன்னமேயே, அவ்வுண் மையினைக் கண்கூடாகக் கண்டோம். அறப்பயிரான இவ் விப்பிரனுக்குச் சிந்தையிலும் நிந்தனைசெய்தது என்ன பாவம்! பெண்ணென்றால் இத்தகைய பெண் ணும் கிடைப்பாளோ! இவ் விருவரையும் இதுவரை யில் பிரித்துவைத்த பாவிக்கு நெஞ்சில் என்ன நஞ் சமோ?'' என்று கூறி அரற்றினர் சிலர்.

சிலரோ, "சகார சண்டாளனை இக்கணமே கழு விலேற்றிக் களிக்கவேண்டும்,'' என்றனர். யாவும் கேட்ட சகாரன் ஓவியம்போல் உயிரடங்கி ஒரு நிமி டம் நின்றனன். வசந்தசேனை உயிர்பெற்று வந்தன ளென்பதை அவனால் நம்பமுடியவில்லை. மறுநிமிடத் தில், இனி அங்கு நின்றால் தலை தப்பாது என்றெண் ணித் திக்குதிசை தெரியாமல் ஓட்டம் பிடித்தான்.

உத்தம சாருதத்தன் தனது காலடிகளில் வீழ்ந்து கிடந்த காரிகையைக் கவனித்தானில்லை, சிவ பெரு மானது பாதார விந்தத்தில் அவன் சித்தம் குவிந்து கிடந்தது. அதனால் தன்வச மிழந்து பரவசமாக நின்றான் அப் புனிதன். இவ்வுலகையே மறந்து தன் னையே தானறியாதவனாய்க் கை கூப்பி நின்ற வள்ள லின் அடிகளில் விழுந்துகிடந்த வசந்தசேனை மூர்ச்சை தெளிந்தெழுந்து, அவன் மார்பகத்தே சாய்ந்து மலை

வீழ் அருவியெனக் கண்ணீர் சொரிந்தனள்; "என் ஆருயிர்த் தெய்வமே! என் அருந்தவப் பயனே! என் இன்னமுதே!" என்றலறி அழுது, கழுத்தைச் சேரக் கட்டிக்கொண்டு கதறினுள். பின்பே சற்று விழி திறந்து நோக்கினன் அச் சதுர்மறையோன்.

உடனேஆங்கிருந்த அரிவையர் பலரும் கைலாகு கொடுத்துவசந்தசேனையைக் கீழே இறக்கி, உபசாரம் பலவும் புரிந்தனர்; ஆடவரோ தங்களில் திலகமான சாருதத்தனை அக்கழுமர மேடையினின்றும் இறக்கி இறைஞ்சி ஏத்தினர். "எல்லாம் ஈசன் செயல். அதனை யாவர் அறிவார்," என்று சாருதத்தன் நினைந்து ஆனந்தக் கண்ணீர் ததும்ப அமலநாதனை மீண்டும் தியானித்தனன். உடனே நகரமக்கள் அவனைக் கட்டித் தழுவிக் கைகொடுத்துத் தோள்மீது தூக்கிக்கொண்டு, "ஆரியன் சாருதத்தன் நீடூழி வாழ்க! ஆரியகன்கோல் ஓங்குக! பாலகன் பட்டு வீழ்க! சகாரன் கழுவினில் வீழ்க" என்று கோஷமிட்டு உச்சயினி நகரெங்கும் வீதிவலம் வந்தனர்.

## 15. ராஜ ஊர்வலம்

பெரும்பாரந் தாங்கின் கற்றூண்பிளந்திறுமேயல்லாது தளர்ந்து வளையாது. அங்ஙனமே தூதிகையெனு மாதும் தனக்கு நேர்ந்த செல்வச் சிறுமையை ஒருபொருட்படுத்தாது உயிர்தாங்கியிருந்தும், கணவனுக்குக் கழுமரங் கிட்டியதெனக் கேள்வியுற்றவுடனே, உயிரைத் துறந்து. ஒப்பற்ற ஒருவனையடையத் துணியாநின்றனள். "காதலனுக்குத் தீதென்று கேள்விப்பட்டதும் ஊதுலைக் குருகின் உயிர்த்து ஆருயிரை விடுவர் அருந்ததிபோன்ருர். அத்தகைய உத்தம பதம்எனக்குக் கிட்

டாதாயினும், தண்ணீர் நிறைந்த தடாகமெனக் கருதி மண்டியெரியும் அக்கினி குண்டத்தில் குளிப்போ" மென எண்ணியவளாய் இராதையை யழைத்துத் தீ மூட்டச் செய்தாள் அத்தூதிகை.

"அம்ம! தங்களைத் தொடர்ந்து யானும் தீயில் குளிப்பேன்" என இராதையும் ஆயத்த மாயினள். கனல் கொழுந்து விட்டு எரியத் தலைப்பட்டதும், தூதிகை முன்னும் இராதை பின்னுமாக அத்தீயை வலம் வரா நின்றனர். அவ்வேளை அருமந்த பாலன் உரோக சேனனுடன் திரும்பிவந்தான் மைத்திரேயன.

சாருதத்தனது கதிகண்டு உயிருண்டோ இல்லையோ எனும் வண்ணம் ஒடுங்கிநின்ற அவ் வுத்தம நண்பன் அக் கற்புடையாளின் கருமங்கண்டு அனைவருக்கு முன்னதாக அக்கினிக் கடவுளின் பாதம் சேரத் தாவியோடினன். பாலன் உரோக சேனனே ஈன்ற அன்னையின் நிலைகண்டும் அவ்வன்னையினும் அன்புடைய செவிலித்தாயின் தன்மைபார்த்தும். தந்தையினும் தகவுடைய மைத்திரேயனது மனப்பான்மையை மதித்தும் "ஆருமற்ற பாவியான என்னை ஆதரிப்பார் ஆண்டவனேயன்றி வேறுயாருமில்லையெனக்கொண்டு 'முன்னவனே' உன்பாதம் வந்தடைவேன்" என்று கூறி, அடியற்ற மரம்போல் நிலத்திற் சாய்ந்தனன்.

அது சமயம் உச்சயினி மக்கள் பலரும் புடைசூழ வசந்தசேனையும் சாருதத்தனும் அவ் வீட்டினுள்ளே புகுந்தனர் ஆனந்த ஆரவாரத்துடன். ஆங்கே தீக் கடவுள் தன் நாவைத் துழாவி நிற்பதையும், நான் முன்னே நான்முன்னே என்று மூவர் தீக்குளிக்க நிற்பதையும் குழந்தை உரோக சேனன் உயிர்ப்படங்கி நிலத்தில் கிடத்தலையுங் கண்டவுடனே, உச்சயினி மக்

களின் கண்ணீர்ப் பெருக்கினுல் தழல்பிழம்பு இருந்த இடம் தெரியாமல் மறையலாயிற்று.

கார்பெற்ற தோகையோ, கண்பெற்ற வாண் முகமோ, என்னும்படி தூதிகை களிப்புமிகக்கொண்டு தன் பதியின் பாதமலரில் வீழ்ந்திறைஞ்சினுள். புதையல் கிடைக்கப்பெற்ற பரம தரித்திரனைப்போல் இராதை உள்ளங்களித்து எஜமானனைச் சேவித்துநின்றனள். உயிர்பெற்ற உடல்போல் மைத்திரேயன் பூரித்தெழுந்து, பூசுர சாருதத்தனைக் கட்டித் தழுவிக் கண்ணீர் பெருக்கினுன். மழைமுகங் கண்ட இளம்பயிரே போல் உரோகசேனன் துள்ளிக் குதித்து, தந்தையின் இடுப்பில் ஏறியமர்ந்தனன்.

ஈ திங்ஙனமிருக்கப் பாலகனது கொடுங்கோன்மையையும் சாருதத்தனுக்கு நேர்ந்த மரணதண்டனையையும் கண்டு பொருத பலரும் கொதித்தெழுந்து ஆரியகனைத் தேடிக் கொணர்ந்து அரியணையில் அமர்த்தி ஆனந்தம் அடைந்தனர். பாலகனே வாளுக்கு இரையாகி வானுலகம் புகுந்தான். இதற்கிடையில் வீரர் பலர் சகாரனைப் பிடித்துக் காலிலும் கையிலும் விலங்கிட்டு, அவ் வேதிய வள்ளலின் முன்னே கொணர்ந்து நிறுத்தினர். சதிகார சகாரன் உடனே சாருதத்தனது அடியிணைகளில் வீழ்ந்து, "பேரறத்தின் பெருமானே! பிறவியில் வள்ளலே! சரணம் சரணம். அணங்குபோன்ற வசந்தசேனை இணங்க வில்லையெனக்கொண்டு, அவள் குரல்வளையைத் திருகினசமயம், அவள் கீழே வீழ்ந்தனள். அவள் இறந்துவிட்டாள் என்று இத் தழைகளைப்போட்டு மூடிவிட்டு, உம்மீது பழி சுமத்தினேன். அறம் வெல்லும். பாவம் தோற்கும் என்பதை இப்பொழுதே கண்டேன்

உயிர்ப் பிச்சை வேண்டுகின்றேன் ; உம்மையன்றி எனக்குக் கதி யார்?" என்று கூவி யிரந்தனன்.

உடனே பௌத்தமதத் துறவி முன்வந்து, "பெரியோரே! கேண்மின். முன்னம் யான் இப்புண்ணியரிடம் கைகால் அமுக்கும் வேலையாளனாக இருந்தேன். பின்னர் வேலையற்றுப் போகவே சூதில் மூழ்கிக் கடனாளியாகி மூக்குடைபட்டு, தேவி வசந்தையின் மாளிகையில் சரண்புகுந்தேன். புண்ணியனது பழைய பணியாளன் எனக் கேட்டதும். அத்தேவி தன் கடகத்தைக் கழற்றி என்னைத் துரத்திவந்த சூதாடிக்கு ஈந்து என்னைக் கடிந்தனள். அக்கணமே நான் அன்புகொண்டு துறவுபுண்டேன். அப்பால் இச் சகாரனால் அநியாயமாக அடியுண்டேன். பின்பு பூங்காவில் குவிந்திருந்த குப்பையிலே சலசல என்று ஓசைகேட்க அதனைப் புரட்டிப் பார்த்து, எனக்கு உயிர்ப்பிச்சை தந்த தேவி வசந்தை குற்றுயிராய்க் கிடப்பதுகண்டு பௌத்தப் பள்ளிக்கு அழைத்துச் சென்று பணி புரிந்தேன்" என்று வரலாறு கூறிக் கொலையின் உண்மையைப் புலப்படுத்தினன்.

அத்தருணம் ஆரியகனது மதிமைச்சன் அங்குத் தோன்றி, "ஒருவனாய் உலகேத்த நின்ற உத்தமனே! ஆபத்தில் உதவிய உமக்கு ஆரியவரசன் குசாவதி எனும் நாட்டைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் சாஸனம் ஈதாகும்" என்று ஓர் ஓலையை நீட்டினன். பின்பு, "பெருமக்களே! அடியேன் புகலக்கேண்மின். அடியேன் பெயர் சார்பிலன். சதுர்மறை வேதியர் குலத்தில் பிறந்தும் வேசை வலையில் சிக்கிச் சீரழிந்தேன். வஸந்தா தேவியின் தாதிப் பெண்ணான மதனிகையை அடையும்பொருட்டு, இவ் வள்ளலின் மாளி

கை புகுந்து வசந்தசேனை வைத்துப்போன நகைமுடிப்பைக் களவாடினேன். உடனே மதனிகை யிடம் சென்று முடிப்பைக் காட்ட அவளோ மண்டையிலடித்துப் புத்தி கூறினள். அது கேட்டபின் அறிவுகொண்டு அத் தேவியிடம் சென்று, சாருதத்தர் அனுப்பியதாகக் கூறி முடிப்பை நீட்டினேன். அப் பெண் தெய்வமோ முடிப்பை எனக்கே ஈந்து பணிப்பெண்ணையும் மணந்துகொள்ள ஆணை தந்தனள். வேதியவித்தகன் வீட்டில் விளைத்த களவின் விவரம் ஈதாகும்" என்றுரைக்க, எல்லவரும் இறும்பூது கொண்டனர்.

பின்னர் வசந்தசேனையின் விருப்பத்துக்கிணங்க, சகாரனது விலங்கைத் தெறித்தெறிந்தான் சாருதத்தன். அக்கருணையின் பெருக்கைக் கண்ட அக்கொடியவன் புடமிட்ட பொன்போலாகிப் பழைய பழிக்குப் பரிகாரம் செய்வதுபோல் அன்றுமுதல் வசந்தசேனையின் ஏவலாளாக அமர்ந்தனன்.

இந்நிலையில் ஆரியகனும் அங்குத்தோன்றி வேதியவர்த்தகனை வணங்கி ஆசி பெற்று ஆனந்தமெய்தினன். சாக்கோல ஊர்வலத்திற்குச் சாருதத்தனை பாலகன் ஆளாக்கினதற்கு ஈடாக, அப்புண்ணிய புருஷன், அவன் தேவி தூதிகை, மைந்தன் உரோகசேனன். கணிகை வஸந்த சேனை, நண்பன் மைத்திரேயன் ஆகிய அனைவரையும் அழகிய இரதத்தின் மீதமர்த்தி நகர்வலம் செய்வித்துத் தானும் களித்து நகர மக்களையும் களிக்கச் செய்தான் ஆரியகவரசன். ஆரியகனது ஆட்சியில் அனைவரும் ஆனந்தமயமாக வாழ்ந்து வந்தனர்.

4026.

**மங்களம்!**

4026.

அடுத்துவரும் நூல்கள்:—

1. **பிரதாப சிம்மன்**

எம். எஸ். எஸ். எழுதியது

2. **வாடா மல்லிகை**

பற்பல எழுத்தாளரின் சித்திரம்

3. **சேஷ கவிதா**

டாகுர் எழுத்து. குமாரசாமி மொழிபெயர்ப்பு

4. **பவழ மல்லிகை**

5. **கனிந்த காதல்**

6. **நேதாஜி**

4026.

# வெளி வந்தவை

சாஸ்திர தீபம் — ரூ. 1 8 0
— ஸ்ரீ எம். எஸ். எஸ்.

சிதைந்த கூடு (டாகுர்) — ரூ. 1 8 0
— ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி

பால பாரதம் — ரூ. 1 0 0
— ஸ்ரீ வேணு குப்புஸ்வாமி

த மீ னு (பெர்தூசி) — ரூ. 1 0 0
— ஸ்ரீ சுந்தர குமரன்

அ மி ர் த ம் — ரூ. 3 0 0
— ஸ்ரீ தி. ஜானகிராமன்

வஸந்த ஸேனை — ரூ. 1 4 0
— ஸ்ரீ எம். எஸ். எஸ்.

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம்............சென்னை